Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 03 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆசிர் 28 (17.06.2004) வியாழக்கிழமை இதழ் :259



றெனி

பல், மூக்குக் கண்ணாடியகம்

- கண் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக் கொள்ள
- உறுதியான பற்களைக் கட்டிக்கொள்ள
- மிதப்பு பற்களுக்கு கிளிப் செய்துகொள்ள

நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

கண்டி வீதி, சாவகச்சேரி. பிரதான வீதி, பருத்தித்துறை

540, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

E3 JUL 2004

# அரச ஊடகங்களில் பொய்ப்பிரசாரம்; உடன் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்

## நோர்வே தூதரிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**சமாதான முயற்சிகளில் தமிழீழ விடுதலைப்புலிகளை விசுவாசம்மிக்க பங்காளிகளாக அரசாங்கம் கருதுமானால் உண்மைக்குப் புறம்பான செய்திகளை அரசாங்க ஊடகங்களில் வெளியிடப்படுவது தடுக்கப்பட வேண்டும் என நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கரிடம் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு மாவட்ட நிலவரம் தொடர்பாக அரச ஊடகங்கள் குரோதத் தன்மையுடன் செய்திகளை வெளியிடுவது தமிழ் மக்களின் நெஞ்சங்களை புண்படுத்தியிருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் உள்ள தமழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்று முற்பகல் இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹன்ஸ் பிறட்ஸ்கருடனான இந்தச் சந்திப்பின்போதே அவர் இந்த விடயங்களை தெரிவித்தார்.

இயல்பு நிலையை எற்படுத்தவும் இராணுவ அத்துமீறல்களைக் கட்டுப்படுத்தவும் யுத்தநிறுத்த உடனபடிக்கை அமுல்படுத்தப்படாமை குறித்தும் தமிழ்ச்செல்வன் தனது அதிருப்தியை நோர்வேத் தூதுவரிடம் வெளியிட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊடகங்களின் பொய்ப்பிரசாரம் ஒரு திட்டமிட்ட யுத்தநிறுத்த மீறலாகும்!

### மட்டு - அம்பாறை அரசியற்துறை அறிக்கை

(மட்டக்களப்பு)

அரச ஊடகங்கள் மட்டக்களப்பில் புலிகளுக்கும் கருணா குழுவினருக்கும் மோதல்கள் இடம்பெறுவதாக பிரசாரம் செய்து மக்கள் மத்தியில் பதற்றத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்த முயற்சிகள் செய்யப்படுவதாக மட்டு-அம்பாறை மாவட்ட அரசியற்துறை கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக - மட்டு-அம்பாறை மாவட்ட அரசியற்துறை வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

அரச ஊடகங்களாகவும், தனியார் ஊடகங்களிலும் அண்மைக் காலமாக மட்டக்களப்பு அம்பாறை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதரக அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாணம் விஜயம்!

நோர்வேத்தூதரக அதிகாரிகள் குழுவொன்று நேற்று யாழ்.குடாநாட்டிற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தது.

இலங்கைக்கான நோர்வேத் தூதரக அதிகாரி ரோகுபுறோரு, நோர்வேத் தூதரக ஆலோசகர் ஜெயவர்த்தன ஆகியோர் தலைமையிலான குழுவினரே நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர். இவர்கள் நேற்றுக்காலை யாழ். மாவட்டச் செயலக உதவி அரசாங்க அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலின் போது, யாழ்.மாவட்டத்தில் நீர் விநியோகம் மேற்கொள்ளல், மழை நீரைச் சேமித்தல் பசளைக்குழி அமைத்தல் போன்ற எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

தொடர்ந்து அரியாலை நீர் நொச்சிதாழ்வு குளம் புனரமைப்பது தொடர்பான பணிகளை ஆரம்பித்துவைத்தனர்.

அத்துடன் நேற்று மதியம் இவர்கள் நொராட் நிறுவன அலுவலகத்தில் திட்ட முகாமையாளர் தலைமையில் யாழ்.மாநகரசபை ஆணை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் மெத்தனப்போக்கை கண்டித்து இன்று மாபெரும் கண்டனப் பேரணி!

யாழ.மாவட்டப் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இன்று மாபெரும் கண்டனப் பேரணியொன்று இடம்பெறவுள்ளது.

அரசின் அசமந்தப் போக்கையும், தமிழருக்கெதிரான அடாவடித்தனங்களையும் கண்டித்து நடத்தப்படவுள்ள இந்தக் கண்டனப் பேரணியில், யாழ் மாவட்டத்தின் பல திக்குகளிலிருந்தும் வந்து நல்லூர் ஆலய முன்றலில் கூடும் பொது மக்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கண்டனப் பேரணியில் மாணவர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள், சமாதான நீதிவான்கள், மற்றும் அரச ஊழியர்கள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் பங்குபற்றுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கண்டனப் பேரணி நிறைவுற்றதும் மக்களின் சகல அன்றாட கடமைகளும் வழமைநிலைக்குத் திரும்பத்தக்க வகையில் இந்நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இந்த கண்டனப் பேரணியில் கலந்து கொள்ளும் பொதுமக்கள் தமது பயணத்தினை மேற்கொள்வதற்கு வசதியாக போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த ஒழுங்குகளை யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்ற

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை அரசு உடன் ஆரம்பிக்க வேண்டும்.

தமிழர் தாயகப்பகுதியில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் சமாதான முயற்சிகளை

## அமெரிக்கா வழங்கும் கப்பலுக்கு

## நோர்வேயின் சமாதான முயற்சிகளை

# தமிழ்ச்செல்வனுக்கு விளக்கினார் நோர்வேத் தூதுவர் பிறட்ஸ்கர்!



சமாதான செயற்பாடுகளை மீண்டும் முன்னெடுப்பது தொடர்பாக நோர்வே எடுத்துவரும் பல்வேறு முயற்சிகள் குறித்து - நோர்வேத தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச செல்வனுக்கு எடுத்து விளக்கினார். அத்துடன் - பிறசல்சில் நடைபெற்ற உதவிவழங்கும் மாநாடு தொடர்பாகவும், நோர்வேத் தூதுவர் விபரமாக எடுத்துக் கூறினார்.

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்குமிடையே நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச செல்வனும், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனும் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சியிலுள்ள சமாதான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கா வழங்கும் கப்பலுக்கு

# 980 மில்லியன் ரூபாவை செலவிடவேண்டிய நிலை!

(கொழும்பு)

இலங்கை கடற்படையினரின் பாவனைக்கென அமெரிக்கா - இலங்கை அரசாங்கத்திற்கு நீண்டகால கடன் அடிப்படையில் வழங்கிய கடற்படைக் கப்பலுக்கு இலங்கை அரசாங்கம் 980 மில்லியன் ரூபாவை செலவு செய்யவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவால் வழங்கப்பட்ட கரேஜஸ் என்ற கடற்படைக் கப்பல் நாற்பது வருடங்கள் பழமைவாய்ந்ததெனவும், அடுத்த பத்து வருடங்களுக்கே இது பாவனையில் பயன்படுத்தப்படக்கூடியதெனவும் கூறப்படுகிறது.

கப்பலின் காரியக் குழுப்பயிற்சி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி சந்திரிகாவை பதவி விலகக் கோரிக்கை!

## முன்னாள் சபாநாயகர் விடுத்தார்

நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலத்துடனிருந்த ஐக்கிய தேசியமுன்னணி தலைமையிலான அரசினை தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்திக் கலைத்துவிட்டு, சிறுபான்மை அரசொன்றை நியமித்து நாட்டை இயங்க முடியாத நிலைக்கு இட்டுச் சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகாவைப் பதவியிலிருந்து விலகுமாறு முன்னாள் சபாநாயகரும் ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் மைக்கல் பெரேரா கேட்டுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பிலேயே ஜோசப் மைக்கல் பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்

(12 ஆம் பக்கம் பார்க்க)


இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...

EXPOAIR Your friend in the skies...

# வயோதிபரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு!

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பகுதியில் வீட்டுக்கிணறொன்றில் இருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றையதினம் வடடுக்கோட்டை கிழக்குப் பகுதியில் இடம்பெற்றது. 59 வயதான விமலசூரியன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

இந்த வயோதிபர், தான் வசித்துவந்த வீட்டில் உள்ள கிணறினுள் சடலமாகக் கிடக்க உறவினர்களால் கண்டுபிடிக்கப்பட்டார். இவரின் சடலம் தற்போது யாழ்.போதன வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. கிணற்றில் சடலமாக மீட்கப்பட்டவர் யாழ் செயலகத்தின் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பெண்கள் கிரிக்கெட் போட்டியில் யாழ்.அணிக்கு இரண்டாமிடம்

(யாழ்ப்பாணம்)

வடக்குக்- கிழக்கு மாகாணமட்ட பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் யாழ்.மாவட்ட அணி இரண்டாம் இடத்தை பெற்றது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாவட்டங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி மட்டக்களப்பில் நடத்தப்பட்டது. இந்தப் போட்டியில் இறுதி இடத் திற்கு மட்டக்களப்பு கிரிக்கெட் அணி யும், யாழ்ப்பாணம் கிரிக்கெட் அணி யும் தெரிவாகின. இதில் யாழ். மாவட்ட பெண்கள் கிரிக்கெட் அணி இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ளது.

# வீட்டினுள் நுழைந்த திருடன் நிர்வாணமாகத் தப்பியோட்டம்

(யாழ்ப்பாணம்)

திருடுவதற்காக வீட்டிற்குள் புகுந்த திருடன் நிர்வாணமாகத் தப்பியோடிய சம்பவம் ஒன்று கல்வியங்காடு, கட்டைப்பிராய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது -

கல்வியங்காடு கட்டைப்பிராய்ப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இரு சகோதரிகள் ஒரே அறையில் உறங்குவது வழக்கமாகும். சம்பவதினத்தன்று குறிப்பிட்ட யுவதிகள் உறங்கிக்கொண்டிருந்த அறையினுள் புகுந்த திருடன், ஒரு யுவதிக்கு அருகில்சென்று தரையில் படுத்திருந்தவாறு குறிப்பிட்ட யுவதியின் கழுத்தில் இருந்த சங்கிலியைத திருட முற்பட்டுள்ளான்.

திருடனின் தலை தற்செயலாக முட்டியதால் குறிப்பிட்ட யுவதி தன்னருகில் ஒருவர் இருப்பதை உணர்ந்து கூச்சலிட்டார்.

மகளின் கூச்சலைக்கேட்ட தந்தையார் எழுந்து ஒடிவர, திருடன் தப்புவதற்காக மதில்மீது ஏறியுள்ளான்.

மதிலில் ஏறிக்கொண்டிருந்த திருடனின் சாரத்தினை யுவதியின் தந்தையார் பற்றிப் பிடிக்கவே அவன சாரத்தினையும் கழற்றிவிட்டு நிர்வாணமாகத் தப்பியோடினான் இந்தச சம்பவம் கட்டப்பிராய் பகுதியில் பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.

# கல்வியியல் கல்லூரியில் ஆங்கில செயலமர்வு

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பக்கல்வி உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கும், தொழில் வழிப்படுத்துனருக்கும் வாய்மொழி மூல ஆங்கிலப் பயிற்சிக்கான செயலமர்வு, எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்தச் செயலமர்வை நடாத்துவதற்கு மகரகம தேசிய கல்வி நிறுவக ஆசிரியவாண்மைத்துறையில் இருந்து, வள ஆளணியினர் வருகை தரவுள்ளனர்.

இந்தச் செயலமர்வில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆரம்பக்கல்வி உள்ளக பயிற்சி ஆசிரியர்களும், அவர்களைப் பாடசாலைகளில் தொழில் வழிப்படுத்தும் சிரேஷ்ட ஆசிரியர்களும் (MENTORS) கலந்துகொள்ளுமாறு யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அறிவித்துள்ளார்.


நிறஞ்சனாஸ் சங்கானை
விஜய், சுவாதி, ரகுவரன் நடித்த
செல்வா
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு8.45 (பு.நே)
General daughter
(சி-2621)

ராஜா யாழ்ப்பாணம்.
5 ஆவது வாரமாக
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடான
சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா நடித்த
ஆய்த எழுத்து
(சி-2623)





18 முதல் விக்ரம், ஜோதிகா நடித்த அருள்
காட்சிநேரம்:-10.30,2.30,6.30மட்டும் (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட
டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த
கில்லி (நீல்ஸ்)
(சி-2622)





தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)


# மூன்று யாழ்.வீர வீராங்கனைகள் கொரியாவுக்குச் செல்கின்றனர்!

கொரிய நாட்டில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள சர்வதேச மட்டத்திலான தடகளப் போட்டியில் கலந்துகொள்வதற்கு, யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 3 வீர, வீராங்கனைகளும் ஒரு பயிற்றுவிப்பாளரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த சி.கமலமோகன் உயரம்பாய்தலிலும், எம்.றஞ்சித் 110மீ ஓட்டத்திலும், எஸ். தயாளினி முப்பாய்ச்சலிலும் பங்குகொள்ளத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பயிற்றுவிப்பாளராக யாழ். பிரதேச விளையாட்டு அலுவலர் சே.றமணன் இவர்களுடன் செல்ல இருக்கிறார்.

இந்த சர்வதேச மட்டத்திலான தடகளப்போட்டியில் கலந்து கொள்ள சுமார் 150 வீரவீராங்கனைகள் செல்லவுள்ளனர். இதே வேளை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து மன்னார் உதை பந்தாட்ட அணி ஒன்றும் செல்லவுள்ளது.

கொரிய நாட்டில் நடைபெறும் சர்வதேச மட்டத்திலான தடகளப் போட்டி, எதிர்வரும் 20ம் திகதி முதல 27ம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் 23 வயதிற்குட்பட்ட வீரவீராங்கனைகள் பங்குபற்றுகின்றனர். என்பது குறிப்பிடத்தக்கது.


## முக்கிய அறிவித்தல்

கடந்த 2004.06.13 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் அழகுக்கலை நிபுணர் திருமதி. பிரபாரெட்டியின் மாணவி நடாத்திய கலந்துரையாடலில் கலந்துகொண்ட மாணவர்களில் **தலை அலங்காரம் (Hair Style 50 க்கு மேற்பட்ட) மாலை கட்டுதல், நாகசடம்** செய்தல் போன்ற பயிற்சிகளைப் பயில்வதற்கு பதிவுசெய்த மாணவர்களும், புதிதாக இவற்றைப் பயிலவிரும்பும் மாணவர்களும் எதிர்வரும் 2004.06.23 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் உள்ள **Y.M.C.A.** மண்டபத்துக்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் 20.06.2004 க்கு முன்னர் உங்கள் பதிவுகளை கீழ்வரும் முகவரியில் பதிவுசெய்து கொள்ளவும்.

**T.K.ருறிஸ்ற் இன்**
*கந்தர்மடம் சந்தி,*
*இல.200, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
தொலைபேசி இலக்கம்:- 021 222 5680
077 6209963
**பதிவுக் கட்டணம் :- ரூபா 2000 மட்டுமே**
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(சி-2670)
**நிர்வாகம்.**


## நீதிமன்றச் செய்திகள்

# சைக்கிள் திருடியவருக்கு 3 மாத சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கரவண்டி ஒன்றைக் களவாடிய ஒருவருக்கு இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட மூன்றுமாத சாதாரண சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

மானிப்பாயைச் சேர்ந்த ஒருவரே 8 ஆயிரத்து 500 பெறுமதியான துவிச்சக்கரவண்டி திருடியதாக யாழ்.நீதிமன்றில் யாழ்ப்பாண குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

குற்றவாளி குற்றத்தினை ஒப்புக் கொணடதற்கு இணங்க இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட மூன்றுமாத சாதாரண சிறைத்தண்டனையை யாழ்.மாவட்ட நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் வழங்கினார்.

# சாராயம் வைத்திருந்தவருக்கு ஒருமாதகாலச் சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

750 மில்லிலீற்றர் வடிசாராயத்தை வைத்திருந்த ஒருவருக்கு இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருமாதகால சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

சட்டவிரோதமாக 750 மில்லிலீற்றர் வடிசாராயத்தை தம்வசம் வைத்திருந்தமைக்காக யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த ஒருவருக்கு எதிராக யாழ்ப்பாண மதுவரிப் பரிசோதகரினால் யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கு அமைய மேற்படி நபருக்கு இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருமாதகால சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.


## நீங்காத நினைவில் ஆண்டு - 21



பல்துறைக் கலைஞர்
**வண்ணைத்தியாகன்**

தோற்றம்
05.12.1933



மறைவு
17.06.1983

*21 வருடங்கள் கழிந்து விட்டாலும் பசுமை மாறாத நினைவுகள்... வண்ணைத் தியாகனும் நானும் நாடகமன்றமொன்றை ஸ்தாபிக்க விரும்பினோம். மன்றத்துக்கு நாமாகரணம் சூட கலைவாணரின் பெயரை நான் பிரேரித்ததும் அதுவே உகந்த பெயரென அவர் ஆமோதிக்க 1959 இல் உருவானது வண்ணைக் கலைவாணர் நாடகமன்றம். அதற்கு தன்னாலான சகல உழைப்பையும் தியாகன் வழங்கியது இன்றும் பசுமையாக இருக்கிறது.*

*சுயமுயற்சியில் ஒப்பனையாளராக வளர்ந்த அவர் எமது மன்றம் என்றில்லாமல் சகல நாடகமன்றங்களுக்கும் ஒப்பனையாளராக மிளிர்ந்தார். கலைஞர் வேலானந்தன் வளர்ச்சியில் ஒப்பனையாளராக மட்டுமன்றி யாழ். நகரில் அறிமுகமாகி காலூன்றவும் காரணியாக இருந்தவர் வண்ணைத்தியாகன்.*

*பாடகர் அமுதன் அண்ணாமலைக்குப் புகழ் தேடித்தந்த ஓஷீலா.. மிஸ்ஸா மிஸிஸ்சா ஆகிய பாடல்களை இயற்றியதுடன் வில்லிசை பலவும் எழுதினார். ஆர்மோனியம் வாசிப்பதில் விற்பன்னர். கருணா வில்லிசைக் குழு வளர்ச்சியின் பிதாமகர். அவரின் மறைவு கலைவாணர் நாடகமன்றத்தின் பின்னடைவுக்கு இட்டுச் சென்றது. குறிப்பாக நான் முன்புபோல் நாடகங்களை அரங்கேற்றுவதற்கு வண்ணைத் தியாகன் இல்லாமல் போனது பெரும் தடையாகவே இருந்து வருகிறது.*

நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(சி-2667)

**இரா-பற்குணம்**
வண்ணைக் கலைவாணர் நாடகமன்றம்
ஸ்தாபக அதிபர்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## விபச்சார விடுதிக் குற்றச்சாட்டில் அமைச்சர் ஒருவர் கைது

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பிரதி நெடுஞ் சாலைகள் அமைச்சராகவுள்ள ரி.பி.எக்கநாயக்க, கொள்ளுப்பிட்டியில் கண்டுபிடிக்கப்பட்ட விபச்சார விடுதியொன்றை நடாத்தியதான குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டார்.

சந்திரிகா தலைமையிலான முன்னைய பொ.ஐ.மு. அரசிலும் பிரதி அமைச்சராகப் பணியாற்றிய எக்கநாயக்க, இதுபோன்ற பல குற்றச் செயல்களில் தொடர்புடையவர் என்று புகார் எழுந்துள்ளது.

கொள்ளுப்பிட்டியில் வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட விபச் சாரிகள் உட்பட பல உயர்மட்ட குடும்பங்களைச் சேர்ந்த பெண்களும் விபச்சாரத் தொழிலில் ஈடுபட்டு வந்ததாகவும்,

இந்த விடுதி பல தடவை பொலிஸாரின் முற்றுகைக்கு உள் ளானபோதும், உயர்மட்ட அரசியல் ஊடுருவல் காரணமாக, இந்த விடுதி யின்மீது நடவடிக்கை எடுக்கமுடியாதிருந்ததாகவும் தெரிவிக்கப்படு கிறது.

## உடத்தலவின்ன கொலை வழக்கின் பிரமத நீதிபதியை நீக்குமாறு கோரிய அனுருத்தவின் விண்ணப்பம் நிராகரிப்பு

உயர்நீதியரசர் எரிக் பஸ்நாயக் கவை உடத்தலவின்ன படுகொலை வழக்கைக் கையாளும் நீதியரசர் குழுவிலிருந்து நீக்கும்படி, அனுருதத ரத்வத்தையின் வழக்கறிஞர் கொடுத்த விண்ணப்பத்தை, நீதிய ரசர் குழு நிராகரித்துள்ளது.

வழக்கு ஆரம்பித்து ஒன்றரை வருடங்கள் கழிந்துவிட்ட நிலை யில், வழக்கை விசாரிக்கும் உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் குழுவின் பிரதான நீதியரசரான எரிக் பஸ் நாயக்கவை நீக்கும்படி அனு ருத்த ரத்வத்தையின் வழக்கறிஞர் ரிறந்த வலலியத விடுத்த விண் ணப் பத்தை, அக்குழு ஒட்டுமொத்தமாக நிராகரித்துள்ளது.

உடத்தலவின்ன கொலை வழக் கில் பிரதான சந்தேகநபரான அனு ருத்த ரத்வத்த மற்றும் அவரது இரு புதல்வர்கள் குறித்த வழக்கு நீதி மன்றத்தில் நடைபெற்று வருகிறது.

அது குறித்த இந்த விண்ணப் பத்திற்கே, பிரதி நீதியரசர் பாலித பெர்ணான்டோ இந்தத் தீர்ப்பை மூன்று நீதியரசர்களினதும் ஏக மனதாக எடுக்கப்பட்ட முடிவென்று தெரிவித்து, அந்த விண்ணப்பத் தையும் முற்றாக நிராகரித்தார்.

இந்தப் பிரதான நீதியரசர் நீக் கப்படுவதற்கான இந்த விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கப்படும் பட்சத்தில், இந்த வழக்கு மீண்டும் புதிதாக விசாரணைக்கு உட்படுத்தப் படவேண்டுமென்பது குறிப்பிடத் தக்கது.

## தன்னாட்சி அதிகாரம் குறித்து புலிகளுடன் பேசக்கூடாதாம்

### தேசாபிமானிகள் அமைப்பு வேண்டுகோள்

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க தமிழீழ விடுதலைப் புலிக ளின் இடைக்கால தன்னாட்சி அதி காரம் தொடர்பாகப் பேச்சுவார்த் தைகளை மேற்கொள்ளக்கூடாது எனத் தேசப்பற்று முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இடைக்கால தன்னாட்சி வரை பானது - தமிழீழத்தை நோக்காகக் கொண்டு அமைக்கப்பட்டதாகும். எனவே, அது குறித்து ஜனாதிபதி சந்திரிகா தமிழீழ விடுதலைப் புலி களுடன் பேசக்கூடாது. பேச்சுவார்த் தைகள் - இறுதித் தீர்வை எட்டும் முயற்சியின் அடிப்படையிலேயே அமையவேண்டும் என்பதில் அரசாங் கம் உறுதியாக இருக்கவேண்டும்.

தன்னாட்சி அதிகாரத்தின் அடிப் படையில் தமிழீழ விடுதலைப் புலிக ளுடன் பேச்சு நடத்தினால், அது விடுதலைப் புலிகளின் தமிழீழ கொள் கைக்கு ஆதரவான போக்கிற்கு உதவுவாக அமைந்துவிடும் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.



நேற்று முன்தினம் நடைபெற்ற "போரிடும் வல்லமை சேர்ப்போம்" இறுவெட்டு வெளியீட்டு விழாவில் - வைத்தியக் கலாநிதி அஜந்தன் இறுவெட்டை வெளியிட்டு வைக்க அதனை, தேசியத் தலைவர் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

## 4 மிக் போர் விமானங்களை வாங்குவதற்கு அரசு முடிவு

இலங்கை விமானப்படையைப் பலப்படுத்தும் நோக்கில் நான்கு மிக்-27 ரக தரைத்தாக்குதல் விமானங் களைப் புதிதாகக் கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்தகால, தாக்குதல் நடவடிக் கைகளிலும், விபத்துக்களிலும் எட்டு மிக்- 27 மற்றும் கிபீர் விமானங்கள் இழக்கப்பட்டமையே இந்தக் கொள் வனவுக்குக் காரணமெனத் தெரிவிக் கப்படுகின்றது.

இவ்வாறு விமானங்கள் இழக்கப் பட்டமையானது, விமானப்படை யைப் பலவீனமடையச் செய்துள்ள தாகப் பாதுகாப்பு அதிகாரிகள் அரசிற்குத் தெரியப்படுத்தியிருந் தனர்.

இதேவேளை - கடந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் விமானப் படைக்கு, எந்தவிதமான விமானங் களும் புதிதாகக் கொள்வனவு செய் யப்படவில்லை. இது தவிர விமானப் படையின் போக்குவரத்து சக்தியும் பலவீனமடைந்துள்ளது.

ஏதாவது அவசரமான நிலை ஏற் படுமானால், நாட்டின் பிறபகுதியி லிருந்து யாழ்ப்பாணத்துக்கு படை களை அனுப்பப் போதிய விமானங் கள் இல்லையெனவும், இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல அரசாங்கத்துக்குத் தெரி யப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு சகல வசதிகளிலும் விமானப்படை பின் தங்கிய நிலை யில் இருப்பதைக் கருத்திற்கொணடு, போக்குவரத்து விமானங்களை இந் தியாவிலிருந்து கொள்வனவு செய் யும் வகையில் அந்த நாட்டு அதி காரிகளுடன் இராணுவத்தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல கலந் துரையாடியுள்ளார் என்பது குறிப் பிடத்தக்கது.

## பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதற்கு மீண்டுமொரு தேர்தல் நடத்துவதே வழி

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் பெரும்பான் மைப் பலத்தைப் பெறுவதற்கான ஒரே வழி நாடாளுமன்றத்தைக் கலைத்து மீண்டுமொரு தேர்தலை நடத்துவதே என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய அர சியல் நிலைமைகள் மற்றும் ஜே. வி.பியின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து மகரகமவில் உள்ள கட்சி யின் அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற கலந்துரையாட லின்போதே, அவர் இவ்வாறு கூறி னார்.

அத்துடன், பெரும்பான்மைப் பலத தைப் பெறுவது குறித்து சிறுபான் மைக் கட்சிகளுடன் தொடர்ந்தும் பேரம் பேசிக் கொண்டிருக்க முடி யாது. ஜனாதிபதியை விரை வில் சந்தித்து மீண்டுமொரு தேர்தல் நடத்துவதற்கான அழுத்தத்தினை தமது கட்சி கொடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பொதுத்தேர்தல் ஒன்றினை சந் திப்பதற்கு அனைவரும் தயாராக இருப்பதோடு, அதற்கான வேலைத் திட்டங்களையும் ஆரம்பிக்க வேணடு மென இந்தக் கூட்டத்தில் பேசிய சோமவன்ச அமரசிங்க, கட்சியின் பிரதேச அமைப்பாளரிடம் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

## தாக்குதல் காரணமாகவே உட்காயங்கள் ஏற்பட்டுள்ளன

### சுமங்கள தேரரின் வைத்தியர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ சுமங் கள தேரரின் உடலிலுள்ள உட் காயங்கள் தாக்குதல் காரண மாகவே ஏற்பட்டவை என வைத்திய நிபுணர் இரத்தின தென்னக் கோன் தெரிவித்தார்.

இந்த விடயம் மருத்துவ பரி சோதனைகள்மூலம் உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் கொலன்னாவ ஸ்ரீ சுமங்கள தேரர் தற்போது தனியார் மருத்து மனை ஒன்றில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

கடந்த 8 ஆம் திகதி நாடாளு மன்றத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங் களின்போது தாக்குதலுக்குள்ளாகிச் சிகிச்சை பெறவேண்டிய தேவை ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து ஹெல உறுமயக் கட்சி விளக்கம் ஒன்றை கொடுப்பதற்கு நேற்று முன்தினம் ஊடகவியலாளர் மகாநாடு ஒன்று கொழும்பில் நடத்தப்பட்டது.

இங்கு ஸ்ரீ சுமங்கள தேரர் கருத்து தெரிவிக்கையில் இவ் வாறான சம்பவம் ஒன்று நடை பெற் றிருந்தும் எந்த ஒரு சம்பவமும் இடம் பெறவில்லை என்று கூறுவது ஒரு பாவச் செயலாகும்.

அரசு, ஆட்சி, நிர்வாகம் என்ப வற்றைவிட மனிதாபிமானம் என்பதே பெறுமதியானது.

எனக்கு எவருடனும் கோபம் இல்லை, மனத்தாங்கலும் இல்லை, என்னைத் துன்புறுத்தியவர்கள் பற்றி மக்களுக்குக் கூறினால், மக்கள் அவர்களைத் தண்டிப்பார்கள். யாரும துன்புறுத்தப்படுவதை நான் விரும்ப வில்லை என அவர் மேலும் தெரி வித்தார்.

## தாண்டிக்குளம் பாடசாலை சூழலில் பெருமளவு வெடிபொருட்கள் மீட்பு!

வவுனியா - தாண்டிக்குளம் வித் தியாலய மைதானம் மற்றும் அத னைச் சூழவுள்ள பிரதேசங்களில் இருந்து 2600 வெடி பொருட்களை கண்ணிவெடியகற்றும் எவ்.எஸ்.டி. அமைப்பு கண்டுபிடித்து அகற்றியுள் ளது.

இந்தப் பாடசாலைப் பகுதியில் கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடி கள் என்பன புதைத்துக் கிடப்ப தாகத் தகவல் கிடைத்ததையடுதது, இந்த அமைப்பு, கல்வித்திணைக் கள அதிகாரிகளுடன் கலந்துரை யாடியபின், பாடசாலையைத் தற்கா லிகமாக மூடியுள்ளது.

இந்தப் பாடசாலை வளவினுள் ளும், அதன் சுற்றுப் புறங்களிலும் பெருமளவான வெடிபொருட்கள் புதைக்கப்பட்டிருந்த நிலையிலேயே கடந்த எட்டு வருடமாக இந்தப் பாட சாலை இயங்கிவந்துள்ளது.

மேலும் பல வெடிபொருட்கள் பாட சாலை வளவினுள் புதைக்கப்பட்டி ருப்பதாகவும், கூடியவிரைவில் இவற்றை அகற்றி மூடப்பட்ட பாட சாலையைத் திறப்பதற்கு நட வடிக்கை எடுக்கப்படுமெனவும் அந்த அமைப்பு தெரிவித்தது.

### வெலிக்கடை சிறைச்சாலை தொடர்பான அறிக்கை சமர்ப்பிப்பு

வெலிக்கடைச் சிறைச்சாலை தொடர்பாக ஆராய்வதற்காக அமைக் கப்பட்ட குழு நேற்று முன்தினம் தனது அறிக்கையினை நீதி அமைச் சிடம் சமர்ப்பித்தது.

அந்த அறிக்கையில் ஆயுட் கால கைதிகள் அவர்களின் பின்னணிகள் தொடர்பாக ஆராய குழு ஒன்று அமைக்கப்பட வேண் டும் எனக் கோரப்பட்டுள்ளது.

கடந்த மாதம் வெலிக்கடை சிறைச்சாலை கைதிகள் தமது ஆயுட் தண்டனைகளைக் குறைக்கு மாறு கோரி 4 நாட்கள் போராட்டம் ஒன்றை நடத்தினர் இதற்கமைய நீதி அமைச்சருடன் பேச்சு வார்த்தை ஒன்று நடத்தி இவர் களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய குழு ஒன்று அமைக்கப் பட்டது.

இந்தக் குழுவே நேற்று முன் தினம் அறிக்கையைச் சமர்ப்பித் தது.

### சுமதிபாலவின் வழக்குத் தீர்ப்பு சனிக்கிழமை

(கொழும்பு)

முன்னாள் கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் தீர்ப்பு எதிர்வரும் சனிக்கிழமை வழங்கப்படவுள்ளது. நேற்று முன்தினத்துடன் இந்த வழக் கின் விசாரணைகள் முடிந்ததை அடுத்தே தீர்ப்புக்கான திகதி அறி விக்கப்பட்டுள்ளது.

கடந்த 1999 ஆம் ஆண்டு இங்கி லாநதில் நடைபெற்ற உலகக் கிண்ண போட்டியைப் பார்வையிடுவதற்காகப் பாதாள உலக தலைவரான தம் மிக்க அமரசிங்கவை போலி ஆவ ணங்கள்மூலம் அங்கு அனுப்பி வைத்த குற்றச்சாட்டே திலங்க சுமதிபாலவின்மீது சுமத்தப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

# 'டி' பிரிவு லீக் போட்டியில் செக் குடியரசு முன்னணி!



ஐரோப்பிய உதைபந்தாட்டப் போட்டியில் நேற்றுமுன்தினம் 'டி' பிரிவில் நடந்த ஆட்டமொன்றில் செக்குடியரசு அணி 2 - 1 என்ற கோல் கணக்கில் லத்விய அணியைத் தோற்கடித்தது.

16 முன்னணி அணிகள் பங்கேற்கும் ஐரோப்பிய சம்பியன்ஷிப் உதைபந்தாட்டப் போட்டி போர்த்துக்கலில் நடைபெற்று வருகிறது. இதன் நான்காவது நாளான நேற்று முன்தினம் நடந்த ஆட்டமொன்றில் செக்குடியரசு - லத்விய அணிகள் மோதின.

சுமார் 20 ஆயிரம் ரசிகர்கள் பார்வையிட்ட இந்த ஆட்டத்தின் தொடக்கம் முதல் இரு அணியினரும் சமபலத்துடன் மோதினர். எனினும், செக்குடியரசு அணியினரின் ஆதிக்கம் சற்று அதிகமாக இருந்தது. பெரும்பாலும் செக்குடியரசு வீரர்களின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே பந்து இருந்தது.

செக்குடியரசு அணியினருக்கு பல முறை கோல் அடிக்கும் வாய்ப்புக் கிடைத்தபோதும் அவர்களுக்கு அதிர்ஷ்டம் கைகொடுக்கவில்லை.

ஆட்டத்தின் 45 ஆவது நிமிடத்தில் எதிர்பாராதவிதமாக லத்விய அணி முதல் கோலை அடித்தது. அந்த அணி வீரர் வெர்பகோவிஸ்கிஸ் இந்த கோலை எளிதாக அடித்தார்.

இதனால் முதற்பாதி ஆட்டத்தில் லத்வியா 1 - 0 என்ற கோல் கணக்கில் முன்னணியில் இருந்தது.



இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கியதுமே செக்குடியரசு அணியினர் ஆக்ரோஷமாக ஆடினர். இதனால் முதல் பாதி ஆட்டத்தில் கோல் அடிக்க வாய்ப்புக் கிடைத்ததுபோல் 2 ஆவது பாதி ஆட்டத்திலும் அவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது.



எனினும் அந்த அணியினரால் அதை கோலாக மாற்ற முடியவில்லை. ஆட்டத்தின் 73 ஆவது நிமிடத்தில் செக்குடியரசு அணி பதில் கோலை திருப்பியது. அந்த அணி வீரர் பரோஸ் இந்த கோலை அடித்தார்.

1 - 1 என்ற கணக்கில் ஆட்டம் சமநிலையை எட்டியதைத் தொடர்ந்து செக்குடியரசு அணியினர் ஆட்டத்தின் வேகத்தை மேலும் அதிகரித்தனர்.

இதனால் 85 ஆவது நிமிடத்தில் செக்குடியரசு 2 ஆவது கோலை அடித்தது. அந்த அணியின் வீரர் கெயின்ஸ் இந்த கோலை அடித்தார்.

பின்னர் இரு அணியினரும் கோல எதுவும் அடிக்காததால் செக்குடியரசு அணி 2 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

# ஜேர்மனி - ஹொலண்ட் போட்டி சமநிலையில்!

'டி' பிரிவின் இன்னொரு ஆட்டத்தில் பலம்வாய்ந்த ஜேர்மன் அணியும், ஹொலண்ட் அணியும் மோதின.

இரு அணிகளும் கிட்டத்தட்ட சமபலம் வாய்ந்ததென்பதால் ரசிகர் வெள்ளம் அரங்கில் கூடியிருந்தது.

சுமார் 46 ஆயிரம் ரசிகர்கள் பார்வையிட்ட இந்தப் போட்டியில் மோதிய ஜேர்மன் அணி 3 முறையும், ஹொலண்ட் அணி ஒரு முறையும் யூரோ - 2004 சம்பியன் பட்டத்தைப் பெற்றிருந்தன.

சமபலம் மிக்க இரு அணிகளுக்கும் இடையிலான போட்டி மிகவும் விறுவிறுப்பானதாக இருந்தது. இரு அணிகளுமே பந்தைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கப் போராடின.

ஆட்டம் ஆரம்பித்த சுமார் 30 ஆவது நிமிடத்தில் ஜேர்மன் வீரர் ரொஸ்ரென் பிரில்ஸ் பிரீ கிக் மூலமாக இடது புறத்திலிருந்து பந்தை உதைத்தார்.



இதை ஹொலண்ட் கோல் காப்பாளர் பாய்ந்து தடுக்க முனைந்தபோதும், அந்த கோலைத் தடுக்க முடியவில்லை.

இதனால் ஆட்டத்தின் முதற் பாதியில் ஜேர்மனி அணி 1 - 0 என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றிருந்தது.



முதற்பாதி ஆட்டத்திலேயே பதில் கோல் அடிக்க ஹொலண்ட் அணியினர் பலமாக போராடிய போதிலும் எந்தப் பலனும் இல்லை.

இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கியபோதே விறுவிறுப்பாக இருந்தது. இரு அணியினரும் கோல்களைப் போட எத்தனித்தபோதும் முடியவில்லை.

ஆட்டம் முடிவு நேரத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோது - ஜேர்மன் அணியே வெற்றிபெறக்கூடிய நிலையில் இருந்தது. ஆனால், ஆட்டம் முடிவுற 9 நிமிடங்கள் இருந்தபோது ஹொலண்ட் அணி வீரர் வான் நிஸ்ர்றூய் ஒரு கோலை அடித்து தமது அணியை தோல்வியிலிருந்து காப்பாற்றினார்.

ஆனால், ஆட்டநேர முடிவுவரை இந்த இரண்டு அணிகளாலும் எந்த கோலையும் போடமுடியாததால் போட்டி சமநிலையில் முடிந்தது.

இதனால் இரு அணிகளும் தலா ஒவ்வொரு புள்ளியைப் பெற்றன. அடுத்ததாக எதிர்வரும் 15 ஆம் திகதி ஜேர்மனி அணி லத்வியாவையும், ஹொலண்ட் அணி செக்குடியரசையும் எதிர்த்து விளையாடவுள்ளன.




# விம்பிள்டன் போட்டியிலிருந்து அன்றே அகாசி விலகினார்!



(லண்டன்)

விம்பிள்டன் ரெனிஸ் போட்டியிலிருந்து அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல முன்னணி வீரரான அன்றே அகாசி விலகியுள்ளார்.

விம்பிள்டன் ரெனிஸ் போட்டிகள் அடுத்தவாரம் தொடங்குகின்றன. இந்தநிலையில் விம்பிள்டனிலிருந்து விலகுவதாக அகாசி அறிவித்துள்ளார். 1997 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தற்போதுதான் முதன்முறையாக விம்பிள்டனில் இருந்து அகாசி விலகியுள்ளார்.

கடந்த 2 மாத காலமாக காயம் காரணமாக அவதிப்பட்டு வருவதாகவும் பயிற்சிகள் மேற்கொள்வதன் மூலம் காயத்தின் வலி அதிகமாகும் வாய்ப்பு இருப்பதால் விம்பிள்டனுக்காக போதிய பயிற்சிகள் எடுத்துக்கொள்ளவில்லை என்று அகாசி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

1992 ஆம் ஆண்டு நடைபெற்ற விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை அகாசி கைப்பற்றினார். இந்த நிலையில் ரெனிஸ் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் அகாசி இருக்கிறார் என்று வெளியான செய்திகளுக்கு மறுப்புத் தெரிவித்த அகாசி, அடுத்த ஆண்டு விம்பிள்டனில் நிச்சயம் சந்திப்போம் என்று தெரிவித்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு பருவகால முடிவில் அகாசி ஓய்வுபெறுவார் என்று யூகத்தின் அடிப்படையிலான செய்திகள் வெளிவந்திருந்தன. 2003 ஆம் ஆண்டு நடைபெற்ற அவுஸ்ரேலிய ஓபன் பட்டத்தை வென்றிருந்ததே அகாசியின் கடைசி கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும்.

கடந்த 16 மாத காலமாக ஒரு ஏ.டி.பி சம்பியன் பட்டத்தைக்கூட அகாசி வெல்லவில்லை. விம்பிள்டனில் 3 முறை அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ள அகாசி, 1999 இல் நடைபெற்ற விம்பிள்டனில் இறுதிப்போட்டியில் சாம்ப்ராசிடம் தோல்வியுற்றார்.

# ஆசியக் கிண்ணப் போட்டிக்கான பாகிஸ்தான் அணி அறிவிப்பு!

ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான 24 பேர் கொண்ட பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் சொகைப் அக்தர் இடம்பெற்றுள்ளார். ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் இலங்கையில் நடக்கவுள்ளது. இந்தப் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் காயத்தை காரணம் காட்டி வேகப்பந்து வீச்சாளர் அக்தர் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

தான் உடற்தகுதியுடன் இருப்பதாகவும், எனவே அணியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் அக்தர் கோரிக்கை விடுத்தார். அதனைத் தொடர்ந்து அக்தர் உடற்தகுதியுடன் இருப்பதை நிரூபித்தால் அணியில் சேர்த்துக்கொள்ளப்படுவார் என்று அந்நாட்டு கிரிக்கெட் சபைத் தலைவர் ஷஹாரியார்கான் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் ஆசியக் கிண்ணப் போட்டிக்கான 24 பேர் கொண்ட பாகிஸ்தான் பயிற்சி அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் சொகைப் அக்தர் இடம்பெற்றுள்ளார். மேலும் இளம் வீரர்கள் ரியாஸ் அப்ரிடி (வேகப்பந்து வீச்சாளர்), சல்மான் பாத் (ஆரம்ப வீரர்) ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதிரடி ஆட்டக்காரரும் சகலதுறை ஆட்டக்காரருமான அப்ரிடி அணியில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

24 பேர் கொண்ட பாகிஸ்தான் பயிற்சி அணி விபரம் வருமாறு, இம்ரான் பர்கத், இம்ரான் நசீர், சல்மான் பாத், யாசீர் ஹமீத், யூனுஸ் கான், இன்ஸமாம் உல்ஹக், யுகானா, மிஸ்பா உல்ஹக், பைசல் இக்பால், பஹீத்கான், அசிம் கமால், மொயின் கான், கமரன் அக்மால், அப்துல் ரஸாக், சொகைப் மாலிக், சொகைப் அக்தர், முகமது சமி, சபீர் அகமட், உமர்குல், அப்துல் ரயூப், இப்திகார், ரியாஸ் அப்ரிடி, தனிஷ் கனேரியா, ராணா.

# மத்திய வரிசை வீரராக களமிறங்க விரும்புகிறேன்!

## வீரேந்திர ஷேவாக் பேட்டி

(பெங்களூர்)

துடுப்பாட்ட வரிசையில் மத்திய வரிசையில் விளையாட விரும்புவதாக இந்திய அணியின் தொடக்க வீரர் வீரேந்திர ஷேவாக் தெரிவித்தார்.

அடுத்தமாதம் இலங்கையில் நடைபெறவிருக்கும் ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான இந்திய வீரர்களின் உடற்தகுதி பயிற்சி முகாம் பெங்களூரில் நடைபெற்று வருகிறது. இந்தப் பயிற்சி முகாமில் கலந்துகொண்ட ஷேவாக் - துடுப்பாட்ட வரிசையில் மத்திய வரிசை வீரராக கலந்துகொள்ள ஆவலாக இருப்பதாகவும், தொடக்கவீரராக தனக்கு நேரடியாக விளையாடும் வீரர் அதிரடி வீரராக இல்லாமல் தடுப்பு ஆட்டம் விளையாடுபவராக இருக்கவேண்டும் என்றும் ஷேவாக் கூறியுள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் தொடக்க வீரராக யுவராஜ்சிங்கை களமிறக்கப்போவதாக கப்டன் கங்கூலி கூறியுள்ள நிலையில், ஷேவாக் இத்தகைய கருத்தைக் கூறியுள்ளார்.

மத்திய வரிசையில் விளையாட வேண்டும் என்பதில் நான் ஆவலுடன் இருக்கிறேன். அடிப்படையில் நான் ஒரு மத்திய வரிசை துடுப்பாட்டவீரர். வாய்ப்புக் கிடைத்தால் மத்திய வரிசையில் விளையாடுவேன்.

ஆனால், இது குறித்து கப்டன் கங்கூலியிடமோ, அணி நிர்வாகத்திடமோ நான் பேசவில்லை. ஏனெனில் தற்போது இருக்கும் தொடக்க ஜோடி சிறப்பாக இருந்துவருகிறது. இதனைக் குலைக்க நான் விரும்பவில்லை. எனவே நான் எனது மத்திய வரிசை விருப்பம் குறித்து யாரிடமும் பேசவில்லை.

ஒருநாள் போட்டிகளில் துடுப்பட்ட வரிசையை நிர்ணயிப்பது கப்டனின் பொறுப்பு. ஒருநாள் போட்டிகளில் தொடக்க வீரராக நான் சிறப்பாக விளையாடிவருகிறேன். ஒருநாள் போட்டிகளில் எந்த வரிசையிலும் விளையாடத் தயாராக இருக்கிறேன்.

டெஸ்ட் போட்டிகளைப் பொறுத்தமட்டில் தற்காப்பு ஆடுபவரே தொடக்க வீரராக எனக்கு ஜோடியாக வர வேண்டும். நேர்த்தியாக தற்காப்பு ஆட்டத்தில் சிறப்பாக விளையாடுபவரே நமது அணிக்குத் தேவை. என்னைப் போல அதிரடியாக விளையாடுபவர்கள் ஆரம்ப 20 ஓவர்கள் தாக்குப்பிடிப்பார்களா? ஒரு ஓவர் தாக்குப்பிடிப்பார்களா என்பதை உறுதியாகக் கூறமுடியாது.

ஏனெனில் அதிரடி ஆட்டத்திற்கு உத்தரவாதம் கிடையாது. எனவே எனக்கு ஜோடியாக விளையாடும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தடுப்பாட்டக்காரராக இருந்தால் நன்றாக இருக்கும்.

அதன்படி - சஞ்சய் பங்கார், ஆகாஷ் சோப்ரா இருவருடனும் எனது துடுப்பாட்டம் ஆரம்பத்தில் நன்றாக இருந்தது. இருவருமே தடுப்பு ஆட்டக்காரர்கள். இந்த இருவருமே முதல் 15 அல்லது 20 ஓவர்கள் வரை எளிதாக தாக்குப்பிடிக்கக் கூடியவர்கள்.



யுவராஜ் விடயத்தைப் பொறுத்தமட்டில் அவருடன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக விளையாடியதில்லை. எதிர்காலத்தில் என்ன நடக்கிறது என்று பார்ப்போம். எது வேண்டுமானாலும் நடக்கலாம். எத்தகைய மாற்றங்களும் ஏற்படலாம். அதே சமயம் யுவராஜ்சிங்குடன் ஆரம்ப வீரராக களமிறங்குவது என்பது மிகச்சிறந்த ஒன்றாகும். இவ்வாறு ஷேவாக் கூறினார்.

# இங்கிலாந்தில் நடைபெறவுள்ள முத்தரப்பு போட்டிகள் விபரம்!

(லண்டன்)

நியூஸிலாந்து கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையே நடந்த டெஸ்ட் தொடரை இங்கிலாந்து 3 - 0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இதைத் தொடர்ந்து 3 நாடுகள் போட்டி நடைபெறவுள்ளது. இதில் 3 ஆவது அணியாக மேற்கிந்தியத் தீவுகள் கலந்துகொள்ளவுள்ளது. ஒவ்வொரு அணியும் மற்றைய அணியுடன் தலா மூன்று முறை மோதும்.

புள்ளி அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும். போட்டி விபரம் வருமாறு -

24 ஆம் திகதி - இங்கிலாந்து- நியூஸிலாந்து

26 ஆம் திகதி - மேற்கிந்தியத் தீவுகள் - நியூஸிலாந்து

27 ஆம் திகதி - இங்கிலாந்து- மேற்கிந்தியத் தீவுகள்

29 ஆம் திகதி - இங்கிலாந்து- மேற்கிந்தியத் தீவுகள்

ஜூலை முதலாம் திகதி - இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள்

3 ஆம் திகதி - நியூஸிலாந்து- மேற்கிந்தியத் தீவுகள்

4 ஆம் திகதி - இங்கிலாந்து - நியூஸிலாந்து

6 ஆம் திகதி - இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள்

8 ஆம் திகதி - நியூஸிலாந்து- மேற்கிந்தியத் தீவுகள்

10 ஆம் திகதி - இறுதிப்போட்டி

## யாழ். பல்கலைக்கழக

# ஊழியர் சங்க போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வெள்ளியன்று எழுதுவினைஞர்களும் வேலைநிறுத்தம்

நான்காவது நாளாகத் தொடரும் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரின் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து - யாழ். பல்கலைக்கழக எழுதுவினைஞர்களும், தொழில் நுட்ப உத்தியோகத்தர் சங்கத்தினரும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இடர்கடன் தொடர்பான கூட்டம் ஒன்றுக்கு யாழ். பல்கலைக்கழக தொழிற்சங்கங்களைப் பதிவாளர் அழைத்தமை தொடர்பாக யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் பத்திரிகைச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்தப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

இடர் கடன் கூட்டத்திற்குச் சமூகமளிக்கும்படி கடந்த 9 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் - ஊழியர் சங்கத்தவரையும் கலந்துகொள்ளும்படி, பல்கலைக்கழகப் பதிவாளரால் அனுப்பப்பட்ட கடிதத்தை ஏற்று - ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் இருவர் இந்தக் கூட்டத்திற்குச் சென்றிருந்த வேளையில், ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமையால், இந்தக் கூட்டத்தில் பங்கேற்க முடியாதெனப் பதிவாளர் தெரிவித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

இடர்கடன் தொடர்பாக பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கோரியுள்ள ஆவணங்களைப் பல்கலைக்கழக நிர்வாகம் சமர்ப்பிக்கத் தயங்குவதாலேயே தமது பிரதிநிதிகள் குறிபபிட்ட கூட்டத்திற்கு அனுமதிக்கப்படவில்லை என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொரிய நாட்டு வைத்தியர் குழு திருகோணமலை வரவுள்ளது

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்திற்குக் கொரிய நாட்டு தேசிய வைத்திய நிபுணர்கள் 20 பேர் விஜயம் செய்யவுள்ளார்கள்.

எதிர்வரும் ஜுலை மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதிவரை 5 தினங்கள் இவர்கள் திருகோணமலையில் தங்கியிருந்து நோயாளர்களுக்குச் சிகிச்சையளிப்பார்கள்.

கப்பல்துறையில் அமைக்கப்பட்டுள்ள திருகோணமலை மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இலவசமாக இந்தச் சிகிச்சை அளிக்கப்படும் என, வடக்கு-கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திருமதி தர்மராஜா தெரிவித்தார்.

பாரிசவாதம், முதுகுத்தண்டு நோய்கள், மூட்டுவலி, கழுத்து நாரிப் பிடிப்பு, நுரையீரல் சம்பந்தமான நோய்கள், சரும நோய்கள், உயர் குருதி அமுக்கம், நீரிழிவு, நித்திரையின்மை, மன அழுத்தம் போன்ற பலவிதமான நோய்களுக்கு இந்த மருத்துவ முகாமின்போது சிகிச்சை வழங்கப்படும். இந்தச் சிகிச்சைகளைப் பெற விரும்புவோர் நகர சபை, பிரதேச சபைகளின் கீழ் இயங்கும் சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளில் ஆடி மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாகப் பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## சங்கீத பாட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண ஆசிரியர் நிலையத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆசிரியர்களுக்கான செயலமர்வு நடைபெறமாட்டாது என வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

(110)

## தேவரையாளி இந்துவின் நிறுவுனர் சிலை திறப்பு!

வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியின் நிறுவுனரும், சைவப் பெரியாருமாகிய கா.சூரன் என்பவரின் உருவச் சிலை திறப்பு வைபவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியின் அதிபர் ம.குட்டித்தம்பி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தமும், சிறப்பு விருந்தினராக அரசியற்துறைப் பொறுப்பாளர் தயாவும் கலந்துகொண்டனர்.

இந்த உருவச் சிலையை பிரதம விருந்தினராக வருகைதந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் திறந்து வைத்தார்.

இந்த உருவச் சிலையை ஓவியர் ரமணி வடிவமைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(12)

# மின்னிணைப்பு வயர் இன்மையால் மின்சாரம் வழங்குவதில் தாமதம்

யாழ்ப்பாணம் மின்சார சபையின் குளப்பிட்டி அலுவலகத்தில் புதிய மின்னிணைப்புக்கான வயர் இல்லாமையினால் மின்சார வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

தற்போது குளப்பிட்டிப் பகுதியில மீளக்குடியமர்ந்துவரும் மக்கள், மின்சாரம் பெறுவதற்காக சுமார் ஐந்து மாத காலத்திற்கு முன்பு விண்ணப்பித்தும் மின் இணைப்பு வயர் இல்லாத காரணத்தினால் மின்சாரம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்த மின்சாரசபை அலுவலகத்திற்கு குறைந்த அளவிலேயே மின்னிணைப்பு வயர்கள் வழங்கப்படுகின்றன.

புதிதாக மின் இணைப்புக்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதால், மின்சாரம் முழுமையாக வழங்க முடியவில்லை என குளப்பிட்டி மின்சாரசபை அதிகாரிகளினால் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மின் இணைப்புக்கான வயர் வருகின்ற திகதி - சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் சரியாக மக்களுக்கு அறிவிக்கப்படாமையினால், மக்கள் இந்த அலுவலகத்திற்குத் தினமும் அலைந்து திரிவதாக விசனம் தெரிவித்தார்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## ஊழியர் சங்க கோரிக்கை விளக்கமளித்து அறிக்கை

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு பல்கலைக்கழ நிர்வாகத்தினர் விளக்கமளித்து நீண்ட அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் விமான பயணச்சீட்டுச் செலவு, பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர் நியமனம், சம்பளப்படி, துணைவேந்தர் விடுதி தனியார் மயமாக்கல், சீருடை, ஊழியர்களுக்கான கடமை நேரம் என்பவற்றுக்குத் தனித்தனியாக, முழுமையாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

## நெடுந்தீவு யுவானியார் ஆலய திருநாள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மத்தி புனித யுவானியார் ஆலயத்தின் வருடாந்தத் திருநாள் திருப்பலிகள் இன்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து ஒன்பது நாட்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி இரவு நற்கருணை எழுந்தேற்றமும், 24 ஆம் திகதி காலை இறுதிநாள் திருப்பலியும் கொடி இறக்கமும் இடம்பெறும்.

(113)

## பாவனைக்கு உதவாத பொருட்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் உள்ள உணவு விற்பனை நிலையங்களில் திடீர் பரிசோதனை மேற்கொண்ட பொது சுகாதார பரிசோதகர் குழு, அங்கிருந்த காலாவதித் திகதி நிறைவு பெற்ற தேயிலைப் பைக்கற்றுக்கள், மனித நுகர்வுக்கு ஒவ்வாத புளி மூடைகள், ஊட்டச்சத்து பானம், பிஸ்கட், சொக்லேட் போன்றவற்றைக் கைப்பற்றி உரிமையாளர்கள் சம்மதத்துடன் அழித்தனர் என்று சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாஸன் தெரிவித்தார்.

## கசிப்பு வைத்திருந்தவருக்குச் சிறைத் தண்டனை

சட்டவிரோதமாக கசிப்பினை வைத்திருந்த நபர் ஒருவருக்கு 3 மாத சிறைத் தண்டனையை யாழ். மாவட்ட நீதிமன்றம் விதித்துள்ளது.

பள்ளிவாசல் வீதி, நாவாந்துறையைச் சேர்ந்த ஒருவருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர் மேல் மூன்று குற்றங்கள் இருப்பதாகத் தெரிவித்தே நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் மூன்று மாத சிறைத் தண்டனையை விதித்துள்ளார்.

## கல்விக் கழகப் பொறுப்பாளர் இடமாற்றம்

(திருகோணமலை)

யாழ். மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் இடமாற்றம் பெற்றுத் திருகோணமலைக்குச் சென்றுள்ளார்.

இதுவரை காலமும் யாழ். மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளராகக் கடமையாற்றிவந்த கவியன்பன், திருகோணமலை மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளராக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

யாழ். மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளராக தாயகன் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

## தார்மீக கோலங்கள் வெளியீட்டு விழா

கோப்பாய் சிவம் எழுதிய தார்மீகக் கோலங்கள் நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர். துரை எங்கரசு தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை கலாநிதி குணராசாவும், ஆய்வுரைகளை கோகிலா மகேந்திரனும், கலாநிதி த.கலாமணியும் நிகழ்த்தவுள்ளனர்.





கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அமைக்கப்பட்ட கல்வி வள நிலைய சேவை அலுவலகத்தை வலி.கிழக்கு உதவி பிரதேச செயலர் கே.இராஜதுரை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

# கல்வி வள நிலைய சேவை கிறிஸ்தவக் கல்லூரியில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நோர்வே நாட்டின் ஒருநாள் வேலைப் பட்டறையின் மூலம் பாடசாலை மாணவர்களால் சேகரிக்கப்பட்ட நிதியானது அபிவிருத்தி நிதியத்தினூடாக ரீடோ நிறுவனம் பெற்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களிலும் கல்விச் சேவையை விஸ்தரித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக யாழ். மாவட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி வளாகத்தில் நேற்று முன்தினம் கல்வி வள நிலையமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# நெடுந்தீவில் நடைபெறும் மகாஞான ஒடுக்க வழிபாடு

(நெடுந்தீவு)

யாழ். மாவட்டத்தின் நெடுந்தீவுப் பங்கிலே கடந்த முதலாம் திகதி தொடக்கம் மகாஞான ஒடுக்க வழிபாடு இடம்பெற்று வருகின்றது.

நெடுந்தீவுப் பங்கில் உள்ள ஆலயத்தைச் சேர்ந்த குடும்பங்களைக் குழுக்களாகப் பிரித்து, வீடு வீடாகச் சென்று ஒவ்வொரு நாளும் வழிபாடுகள் இடம்பெற்றுவருகின்றன. இந்த வழிபாடுகள் எதிர்வரும் ஜுலை மாதம் 04 ஆம் திகதிவரை இடம்பெறும்.

கத்தோலிக்கர்களது இறை தியானங்களை விருத்தி செய்யவும், மன மாற்றங்களை ஏற்படுத்தவும், மத மாற்றங்களைக் கட்டுப்படுத்தவும் இன்னும் பல காரணங்களுக்குமாகவே இந்த வழிபாடு நடத்தப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

யாழ். மாவட்டத்தில் இருந்தும், இந்தியாவில் இருந்தும் பங்குத் தந்தையர்கள் பலர் நெடுந்தீவுப் பங்குக்கு வந்து இந்த வழிபாடுகளை நடத்தி வருகின்றனர்.

தற்போது இந்த வழிபாடு - நெடுந்தீவு மத்தி புனித தோமையார் ஆலய பங்கு மக்கள் மத்தியிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(113)

## வெளிக்கள உத்தியோகத்தருக்கான வதிவிடப் பயிற்சிநெறி

(நெடுந்தீவு)

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான 2004 ஆம் ஆண்டுக்குரிய வதிவிடப் பயிற்சிநெறி - எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதிவரையான 4 நாட்களுக்கு காலை 9 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரைக்கும் திருகோணமலை உப்புவெளி மாகாண சபை விருந்தினர் விடுதியில் உள்ள விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியில் வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சகல மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வடக்கு- கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (113)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
மூன்றாவது அகவையில்



பெயர் : இ.ஷாத்வீகா
முகவரி : இமையாணன், உடுப்பிட்டி.

வாழ்க வளமுடன்
சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்




**நெல்லியடி, பருத்தித்துறைச் சந்தைகளுக்கு கோழிகள் தட்டுப்பாடின்றிக் கிடைத்தபோது, அவை எங்கிருந்து கிடைக்கின்றன என ஆராய்ந்தோம். சுபகணநாதன் பண்ணையிலிருந்தும் கிடைப்பதாகத் தெரிந்தது. இது பற்றி அவரிடம் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டபோது -**

# படிப்புக்கேற்ற வேலையை எதிர்பார்த்தால் இளைஞர்களால் முன்னேற முடியாது

எனது பெயர் இ.இரஞ்சிதன். வயது 30 நான் மாலிசந்தி - அல்வாய் கிழக்கு, அல்வாயில் வசிக்கிறேன். எனது ஆரம்பக் கல்வியை அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திலும். உ[illegible]ர்படிப்பை யாழ்பாணம் ஹா[illegible]லூரியிலும் கற்றேன். பட்டப்படிப்பை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் முடித்தேன்.

எனது குடும்பநிலை காரணமாக உயர் கல்வியை தொடருவதற்கு பணம் தேவைப்பட்டது. இதனால், வருமானம் தரக்கூடிய ஒரு தொழிலைச செய்ய வேண்டியநிலை ஏற்பட்டது. அதேவேளை அது வருமானத்தைத் தருக்கூடிய தொழிலாகவும், வளர்ச்சியடையக்கூடிய தொழிலாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக இத்தொழிலைத் தேர்ந்தெடுத்தேன்.

1995 ஆம் ஆண்டளவில் இந்த கோழிப் பண்ணையை சிறிதாக ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் கோழிக் குஞ்சுகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்கொண்டேன். இதனால் ஒரே சமயத்தில் அடை இருக்கும் பல கோழிகளுக்கு முட்டைகளை அடைவைத்து, அதன் மூலம் குஞ்சுகளைப் பெற்றுக்கொண்டேன்.

இவ்வாறு ஒரே சமயத்தில் ஆகக்கூடியது 50 தொடக்கம் 60 வரையிலான குஞ்சுகளைப் பெற முடிந்தது. தரமான உணவுகளைக் கொடுத்து - பேட்டுக் குஞ்சுகளை முட்டைக்கும், சேவல் குஞ்சுகளை இறைச்சிக்கும் பயன்படுத்தினேன். எனினும், ஆரம்பத்தில் இது மிகச் சிறிய அளவிலான இலாபத்தையே ஈட்டித்தந்தது.

காலப்போக்கில் விமான சேவை கொழும்பிற்கும், பலாலிக்கும் நடைபெற்றபோது கொழும்பிலிருந்து முட்டைகோழி, இறைச்சிக் கோழிக்குஞ்சுகளைப் பெற்று, சிறிது சிறிதாக பண்ணையை விருத்தி செய்ய ஆரம்பித்தேன்.

எனினும், கோழிக் கூடுகளை அமைப்பதில் பெரும் நிதிப் பிரச்சினையை எதிர்நோக்கிய போதும், நானே இங்கு கிடைக்கக்கூடிய மூலப் பொருட்களைப் பயன்படுத்தி கூடுகளை அமைத்துக் கொண்டேன்.

எனினும், A-9 பாதையின் திறப்பு, வெளிநாட்டவர் மற்றும் தென்பகுதி மக்களின் வரவு என்பன விற்பனையில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியமையால், எனது நிறுவனம் இன்று வளர்ச்சியடைந்துள்ளது.

மேலும் எனது நிறுவனம் வளர்ச்சியடைய நியாயமான விலை, வாடிக்கையாளரை கௌரவமாக நடத்தி, அவர்களின் மனம் கோணாது சேவை செய்தல் போன்றவை காரணமாக அமைகிறது. இது மட்டுமன்றி எனது பிரதேசத்தில் கோழிவளர்க்கும் ஆர்வம் உடையவர்களைத் தெரிவுசெய்து, கடனடிப்படையில கோழிகளை வழங்குகிறேன். பின்னர் அவற்றைச் சரியான பருவத்தில் மொத்தமாகக் கொள்வனவு செய்து, சந்தைப்படுத்துவதனால். போட்டித் தன்மையைத் தவிர்க்கக் கூடியதாக உள்ளது.

அதனால் விற்பனையில் தனியுரிமையைப் பெற்றுக்கொண்டுள்ளேன். இதனால் கோழி வளர்த்துத் தருபவர்களுக்கு வருமானம் பெறக் கூடியதாக இருக்கின்ற அதேவேளை, எமது நிறுவனமும் வளர்ச்சியடைகிறது.

நான் கோழி வளர்ப்பதைப் பற்றியோ அல்லது கோழிகளை சுத்தம் செய்து கொடுப்பதைப் பற்றியோ தவறான கருத்தை சமூகம் கொண்டிருப்பதாக நான் கருதவில்லை. ஏனெனில். என்னிடம் கோழியைக் கொள்வனவு செய்யவரும் உயர் பதவி வகிப்பவர்கள் எல்லோரும் 'படித்த இளைஞர்கள்' இவ்வாறு துணிந்து சுயதொழிலில் ஈடுபடுவது வரவேற்கத்தக்கது எனக் கூறி உற்சாகப்படுத்துகிறார்கள்.

கல்வி என்பது அறிவையும், நற்பண்பையும், ஆளுமையையும் வளர்த்துக் கொள்வதற்காகவே அன்றி, வெள்ளைவேட்டி உத்தியோகம் பெறுவதற்காகவல்ல. மேலும், படித்த எல்லோருக்கும் அரசாங்க உத்தியோகம் கிடைக்கும் என்பது சாத்தியமில்லை என்பதனை நான் படிக்கும்போதே உணர்ந்து கொணடேன்.

என்னைப்போல படித்த, கஷ்டப்பட்ட இளைஞர் பலருக்கு - ஒரு சுயதொழிலைப் பெறுவதற்கு என்னாலான உதவியை நிச்சயமாகச் செய்வேன். இதற்காக 10 தொடக்கம் 15 வரையான குடும்பங்களைத் தெரிவுசெய்து அவர்களுக்கு கடன் அடிப்படையில் குஞ்சுகளை வழங்கி, அவற்றிற்கான சந்தை வாய்ப்பையும் பெற்றுக்கொடுத்துள்ளேன். அவர்கள் நன்மை பெறும் நோக்கில் இவ்வாறு செய்து வருகிறேன்.



படிப்புக்கேற்ற வேலை கிடைக்க வேண்டுமென்றால் நாம் முன்னேற முடியாது. எந்தவொரு தொழிலையும் இழிதொழில் எனக் கருதாது, அதனை ஆர்வமுடனும், திறமையுடனும் நுட்பமாகச் செய்தால் அதில் வெற்றி நிச்சயம். எனவே எமது திறமைகளை தனித்து அரச உத்தியோகம் என்ற வட்டத்துக்குள் முடக்காமல், அதற்கப்பாலும் செயற்பட வேண்டும் எனக் கூறினார்.

ஒரு வர்த்தகமாணிப் பட்டதாரி அரச உத்தியோகத்தை நம்பாமல் தனது சுய தொழிலில் முன்னேறியிருப்பதைக் கண்ணுற்ற மகிழ்வுடன் நாம் கருத்துப் பரிமாற்றத்தை முடித்துக்கொண்டோம்.

**க.கனெக்ஸ்**

# தொழிலில் வெற்றிபெற 10 வழிமுறைகள்



**இன்று சுயதொழில் தொடங்கும் வேகமும், தொழிற்பயிற்சி பெறுவதும் அதிகரித்து வருகிறது. எல்லாவகை நுட்பங்களையும் அறிந்து தொழில் தொடங்குபவர்கள்கூட சில நேரங்களில் தொடர்ந்து தொழிலை நடத்த முடியாத நிலைக்கு உள்ளாகி விடுகிறார்கள். இதனால் தொழில் தொடங்கியவர்களில் ஒரு சிலர் மட்டுமே வெற்றிபெற முடிகிறது.**

**இவ்வாறு புதிதாக தொழில் புரிய வருபவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய பத்து செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றது.**

**படித்துப் பயன்பெறுங்கள் -**

● ஒரு தொழிலை தொடங்குமுன் - உங்களுடைய தொழில் அனுபவம், தொழில் செய்யும் ஊர், கிடைக்கும் மூலப்பொருள், பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் ஆகியவற்றைக் கவனித்து தொழில் தொடங்கவேண்டும்.

தொழில் தொடங்கிய பின்னர் தொழிலை நடத்துவதில் சிரமங்கள் வரலாம். இலாபம் ஈட்ட சிறிதுகாலம் நீடிக்கலாம். இந்த நேரங்களில் மனம் சோர்ந்து போகாமல், தொடர்ந்து தொழிலில் கவனம் செலுத்தவேண்டும். அதைவிடுத்து, இன்னொரு தொழில் நன்றாக இருக்கிறதே என்று, அடுத்த தொழிலுக்கு மாறாதீர்கள்.

● ஒரு பொருளை தயாரிக்க திட்டமிடும்போதே, அதை தயாரிக்கும் இயந்திரங்களை தரமுள்ளதாக பார்த்து வாங்கவேண்டும். உற்பத்திப் பொருட்களை ஒரு ஊரில் உள்ள மக்களிடம் விற்பனை செய்து, அவர்களின் கருத்துக்களை தெரிந்து கொண்டு அதற்கேற்றவாறு பொருட்களை மேம்பாடு செய்து எல்லாப் பகுதிகளுக்கும் விற்பனைக்கு அனுப்பலாம். நீங்கள் விற்கும் பொருள் - குறைந்தது 10 வாடிக்கையாளரையாவது கவரவேண்டும்.

● தொழிலை சிறப்பாக நடத்த - நிதி, விற்பனை, உற்பத்தி, நிர்வாகம், வருமான துறைகளில் சிறப்புப் பெற்றவர்களின் ஆலோசனைகள், அறிவுரைகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். வெற்றியுடன் செயற்படுபவர்கள் எல்லாம் தங்களைவிட திறமையானவர்களை வைத்தே தொழிலை நடாத்துகிறார்கள். எனவே, தொழிலகத்தில் பணிபுரியும் திறமைசாலிகளை ஊக்குவித்து, அதற்கேற்ற பொறுப்பும், வசதியும் வழங்கவேண்டும். ஒரு நிறுவனத்தின் வெற்றி - அதனை நிர்வகிக்கின்ற முதல் மனிதரையே சார்ந்துள்ளது. எனவே, நீங்கள் சரியான வழிகாட்டியாக, முதல் மனிதராக செயல்படவேண்டும். இதை நினைவில் கொள்ளுங்கள்.

● ஒரு தொழிலை கொண்டுசெல்வது, இரண்டு சக்கரவண்டியை ஓட்டிச்செல்வதற்கு ஒப்பானதாகும். பயணம் செய்யும் வரை தூரத்தைக் கடக்கலாம். பயணத்தை நிறுத்தினால் பயணம் தடைப்பட்டுவிடும். எனவே, தொழில்களில் தொடர்ந்து ஒரே மாதிரி இருக்கும் என்ற நிலை இல்லை.

தொடர்ந்து வளரவேண்டும். அவ்வாறு வளராவிட்டால் அந்தத் தொழில் நட்டமடையும். எனவே, இதனைக் கருத்தில் கொண்டு, தொழிலை தொடர்ந்து வளர்க்கவேண்டும். அவ்வாறு வளர்த்தால்தான் ஒவ்வொரு நாளும் உயரும் பொருட்களின் விலை, ஊழியர்களின் சம்பளம், வட்டி, தேய்மானம் போன்றவற்றை எதிர்கொள்ளமுடியும்.

● ஒவ்வொரு மனிதன் வாழ்விலும் வெற்றிபெற பலமுறை வாய்ப்புகள் வருகின்றன. வெற்றி பெறுபவர்கள் அதனை பயன்படுத்துகிறார்கள். மற்றவர்கள் அதனை தவற விட்டுவிடுகிறார்கள். எனவே நீங்கள் கவனமாக இருங்கள்.

கண்காட்சி, கருத்தரங்குகளில் பங்குபற்றுங்கள். புதிய கண்டுபிடிப்புக்கள், உங்கள் போட்டியாளர்களின் நிலை, வியாபார வாய்ப்புக்கள் போன்றவற்றை தெரிந்து கொள்ளுங்கள்.

● தொழிலில் ஒருவர் மட்டுமல்ல, அனைவரும் வெற்றி பெறலாம். உங்களுக்கு மூலப்பொருள் உதிரிப்பாகங்கள் விற்பவர்களுக்கு சரியான விலையையும், குறித்த காலத்துக்குள் பணத்தையும் கொடுங்கள்.

அவர்கள் இலாபத்துடன் செயற்பட்டால்தான், தொடர்ந்து உங்களுடன் வியாபாரத்தில் ஈடுபடுவார்கள். வாடிக்கையாளர்களுக்கு கொடுத்த பணத்திற்கு மதிப்புள்ள பொருளைக் கொடுத்து அவர்களைத் திருப்திப்படுததுங்கள்.

● மற்றவர்களைவிட வித்தியாசமாக முயன்றுபாருங்கள். வெற்றி வாய்ப்புக்கள் அதிகம் கிடைக்கும். அதேபோல் வாடிக்கையாளர்களிடமும் 'விற்றபொருளை திரும்பப் பெற மாட்டேன் என்பதைவிட, பொருளில் குறை இருந்தால், பொருளை திரும்பப் பெறுகிறேன் என்று கூறும்போது, விற்பனை பல மடங்கு பெருகும். எனவே, அணுகுமுறையை சரியாகக் கையாளவேண்டும்.

● பணத்தைச் சிக்கனமான வழிகளில் செலவிடுங்கள். ஏனெனில், அந்த அளவுக்கு உங்களுக்கு இலாபம் அதிகரிக்கும்.

● எந்தத் தொழிலையும் இலாபம் இல்லாமல் நடத்தமுடியாது. அதனால். பொருளுக்கு விலை நிர்ணயம் செய்யும்போது ஈட்டும் இலாபத்தை கருத்தில் கொள்ளவேண்டும். இவ்வாறு பெற்றுக் கொள்ளும் இலாபத்தில் பாதியை தொழில் வளர்ச்சிக்காகவும், சேமிப்பதற்காகவும், சொந்த செலவிற்கும் பயன்படுத்த வேண்டும்.

● எந்த தொழிலாக இருந்தாலும் துணிவும், தன்னம்பிக்கையும் அவசியம், அதற்காக தொழில் தொடர்ந்தும் நட்டத்தில் இயங்கும் போது இதனைக் கருத்தில் கொள்ளாது, தொடர்ந்தும் நடத்துவது தோல்விக்கு வழிகோலும்.

எனவே, ஒரு தொழிலை தொடங்குவதற்கு ஏற்ற காலத்தை எப்படி தெரிந்துகொள்ள நினைக்கிறோமோ, அதேபோல தொழிலை எப்போது மூடவேண்டும் என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள். இவையே தொழிலை தொடங்கி சிறப்பாக தொடர்ந்து நடத்த உதவிபுரியும்.

நன்றி - தொழில் உலகம்.

# தொழில் வங்கி



| நிறுவனம் | வெற்றிடமாகவுள்ள பதவிகள் | அடிப்படைத் தகுதி | முடிவு திகதி |
|---|---|---|---|
| யுனிசெப் | வாகன ஓட்டுநர் (மட்டக்களப்பு, திருகோணமலை) | 5 வருட அனுபவம். சாதாரணதர சித்தி, ஆங்கிலம் உட்பட. | 25.06.2004 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறவிரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# பல வருட பயன்பாட்டை தரக்கூடிய சுண்டங்கத்தரி



சுவையும், மருத்துவக் குணமுமிக்கதாய் சுண்டங்கத்தரிக்காய் விளங்குகிறது. இதனை இலங்கை மக்கள் மிக முக்கியமான மரக்கறியாக கருதி வருகின்றார்கள்.

ஆதிகாலத்திலிருந்தே சுண்டங்கத்தரிக்காய் மக்களின் உணவாகக் கொள்ளப்பட்டு வருகிறது. இது காட்டில் வளரும் செடியாகும். இதனை விற்பனை நோக்கம் கருதி உற்பத்தி செய்யவில்லை. ஆனால், இவை அதிகமாக கிராமங்களில் - விவசாயம் செய்து முடித்த நிலங்களில் இயற்கையாக வளருவதைக் காணலாம். அனைத்துப் பிரதேசங்களிலும் மிக நன்றாக சுண்டங்கத்தரிக்காய் வளரக்கூடியது.

கோடைகாலத்தில் சுண்டங்கத்தரிக்காய் - விவசாயம் செய்யக்கூடியதாக இருப்பதால், இது அதிகமாக உலர்வலயப் பிரதேசங்களிலேயே உற்பத்தி செய்யப்படுகிறது.

மேலும் எந்தக் காலத்திலும் உற்பத்தி செய்யக்கூடியதாக இருந்தாலும், மழைகாலத்திலேயே உற்பத்தியை ஆரம்பிப்பது மிகவும் உகந்தது.

சுண்டங்கத்தரிக்காய் பலவகைப்படும். நன்றாக உற்பத்தியை மேற்கொண்டால், பல வருடங்களுக்கு அதனுடைய பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தனியாகவோ அல்லது தானியங்கள், மரக்கறி, கிழங்கு வகைகளுடன் கலந்தோ சுண்டங்கத்தரிக்காயை உற்பத்தி செய்யமுடியும். காணிகளின் எல்லைகளிலும் இந்த உற்பத்தியை மேற்கொள்ளலாம்.

நன்றாக நீர் ஊறக்கூடிய மண் உகந்தது. செம்மண்ணில் சுண்டங்கத்தரிக்காய் நன்றாக வளரும். மண்ணில் காபனிக் அடங்கியிருப்பது நல்லது. அவ்வாறு இல்லையெனில், காபனிக் கலப்பதன் மூலமும், வாய்க்கால்கள் நன்றாக வெட்டுவதன் மூலமும் நல்ல உற்பத்தியைப் பெறலாம்.

விதைகளைப் பதியம் வைப்பதன்மூலம் கன்றுகளைப் பெறலாம். இவ்வாறான விதைக்



கன்றுகள் - அதிக விளைச்சலைத் தரக்கூடியது. இதற்கு நன்றாக முற்றிய அல்லது பழுத்த விதைகளை வேறாக்கி, நீரினால் விதைகளைக் கழுவி, பாத்திகளில் பதியம் போட வேண்டும்.

முளைப்பதற்குப் பலகாலம் எடுக்கும். விரைவாக முளைக்க வைப்பதென்றால், விதைகளுக்கு ஹோமோன்கள் வழங்குவதினாலோ அல்லது நீரில் ஊற விடுவதினாலோ விளைவைப் பெற்றுக்கொள்ளலாம்.

விதைகளை அல்லது கன்றுகளை விதைக்க முன்பு, மண்ணை நன்றாக வெட்டி, புரட்டி மண்கட்டிகளை உடைத்து, உயரமான பாத்திகள் அமைக்க வேண்டும். பின்பு பாத்திகளின் மேல் உக்கிய சாணத்தையும், மண்ணையும் கலந்து, சிறிய கனமான தட்டையாகப் பரப்பிவிடவேண்டும்.

அதன்பிறகு **10 cm x 15cm** இடைவெளிகளாக இருக்கும்படி கோடிட்டு, அதற்குள் விதைகளை இட்டு, மேலால் சிறிதளவு மண்ணினால் மூடிவிடவேண்டும்.

இதற்குச் சூரியஒளிபடும்படி இருக்கவேண்டும். மருந் துகள் போடப்பட்ட விதைகள் முளைப்பதற்கு, 2-3 வாரங்கள் எடுக்கும். முளைக்கும் வீதம் 56% ஆகும். விதைகளுக்கு விற்றமின்கள் வழங்குவதன்மூலம், முளைக்கும் வீதத்தை அதிகரிக்கலாம்.

தண்டுகளை அல்லது வேர்களை நடும்போதும், இந்த இடைவெளிகளிலேயே நடவேண்டும். பாத்திகளில் ஈரத் தன்மை இருந்தால், இவை விரைவாக முளைப்பதோடு, நன்றாக வளர்ச்சியும் அடையும்.

இவ்வாறு முளைக்கும் சுண்டங்கத்தரிக்காய் மரங்களின் வேர்களை வெட்டி மீண்டும் முளைக்க வைத்து, புதிய கன்றுகளைப் பெறலாம்.

மேலும் இந்த முளைத்த விதைகளை 2-3 வாரங்கள் சென்றபின்பு **8cm - 10cm** அளவு சிறிய பொலித்தீன் பைகளுக்கு மாற்றலாம். பைகளில் கன்றுகளை முளைக்க வைப்பதனால், மரங்கள் வாடும் தன்மை குறையும். மழை பெய்யும் காலங்களில் சிறப்பான கன்றுகளைப் பெறமுடியும்.

பெரும் போகத்தில் சாதாரண மழைபெய்யும்போது அல்லது கடும்மழை பெய்த பின்பு கன்றுகளைப் பயிரிடுவது நல்லது. இவற்றை முளைக்க வைப்பதற்கு 50 **cm** நீளமும், 50 **cm** அகலமும், 50 **cm** ஆழமும் கொண்ட கிடங்குகளைத் தயாரித்து, அதற்குள் காபனிக் உரமும், வெளி மண்ணும் கலந்த கலவை இடவேண்டும். ஒரு கிடங்குக்குள் ஒரு கன்று என நடவேண்டும். நீர்விட்டு தற்காலிகமாக குழைகளினால் மூடிவிடுவது நன்று.

நல்ல நிலங்களில் வளரும் சுண்டங்கத்தரிக்காய் மரம் **3m-5m** உயரத்துக்கும், கிளைகள் பக்கவாட்டில் **3m-6m** வரையும் பரந்து இருப்பதைக் காணலாம்.

குறைந்த இடைவெளிகளில் பயிரிடப்பட்ட மரங்களின் கிளைகளை வெட்டி விடலாம். அதேநேரம் மரம் வளர்ச்சியடையாமல் இருந்தால், மண்ணுக்கு உரம் சேர்க்க வேண்டும். வருடத்துக்கு ஹெக்டேயர் ஒன்றுக்கு 5-10 தொன் காபனிக் உரம் சேர்ப்பது நல்ல பலனைக் கொடுக்கும்.

சுண்டங்கத்தரிக்காய் உற்பத்தியை வரண்ட வெப்பம் மற்றும் கோடைகாலத்திலும் மேற்கொள்ளலாம். ஆனால், நீர் விநியோகம் செய்யவேண்டும். 7 நாட்களுக்கு ஒரு தடவை நீர் விநியோகிப்பது மிகமுக்கியமாகும்.

சுண்டங்கத்தரிக்காய் பயிரிட்ட ஆரம்பகாலத்தில் நிலத்தை மூடும்படியாக பக்கவாட்டில் புற்களை முளைக்க விடாமல் தடுக்கவேண்டும். நடுப்பாக நெல்லு, சோளம், குரக்கன் போன்றவற்றின் வைக்கோல்களைப் பரப்பி, புற்களை முளைக்க விடாமல் தடுக்கலாம்.

இந்தக் கன்றுகள் வளர 4-6 மாதங்கள் எடுக்கும். இந்தக் காலப் பகுதிக்குள் சூரியஒளி விழும் நிலத்தின் பகுதிகளில் வேறு உற்பத்திகளை மேற்கொள்ளலாம். இதற்காக சோளம், குரக்கன், நிலக்கடலை, பயறு, உழுந்து, கௌபி, சோயா, போஞ்சி போன்ற தானியங்களை உற்பத்தி செய்யலாம். வல்லாரை, பொன்னாங்காணி, கோவா, முள்ளங்கி, வெங்காயம், வத்தாளை போன்றவற்றையும் பயிரிடமுடியும்.

## நோய்த்தாக்கம்

சுண்டங்கத்தரிக்காய் கன்று பூப்பூக்கும் மற்றும் காய்காய்க்கும் காலத்தில், தண்டுகளையும், காய்களையும் ஓட்டையாக்கும் பூச்சிகள் உருவாகின்றன. இந்தப் பூச்சிகள் வளர்ச்சியடைந்து வரும் காய்களை ஓட்டையாக்கி, அதற்குள் இருக்கும் மென்மையான பகுதிகளை உணவாகக் கொள்கின்றன.

இவ்வாறான பூச்சிகளைத் தடுப்பதற்கு - கிடங்கு வெட்டி, அதற்குள் இவற்றைப் புதைத்துவிடவேண்டும். பாதிப்பு அதிகமானால், தண்டின் அடிக்கு காபோயியுரான் அளவாகப் போட வேண்டும்.

மரங்களின் அடியில் இந்தப் பாதிப்பு இருந்தால், சுண்டங்கத்தரிக்காய் கன்று முற்றும் ஆரம்ப காலத்தில்- தண்டுகள், கன்றின் அடிப்பகுதிகளை பொலித்தீனால் சுற்றிவிடுவதால் பாதிப்பைக் குறைத்துக்கொள்ளலாம்.

பாதிப்பு அதிகமானால், 109 காபோயியுரானை கன்றின் அடிக்குப் போடலாம். சுண்டங்கத்தரிக்காய் உற்பத்திக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வண்டாக 'எடிலெக்ணா'வைக் குறிப்பிடலாம்.

இலைகளில் உயிர்வாழும் இந்த வண்டுகள் - மரங்களின் பச்சை நிறமான பகுதிகளை உண்கின்றன. இதனைத் தடுப்பதற்கு 'காபரில்' என்ற கிருமிநாசினியை உபயோகிக்கலாம்.

| இரசாயன உரம் கிலோ கிராம் ஹெக்ரேயருக்கு | | | |
|---|---|---|---|
| காலம் | யூரியா | சுபர் பொஸ்பேட் | மியூரியெட் ஒப் பொட்டேஸ் |
| கன்றுகளை முளைக்க வைக்க முன்பு | 75 | 325 | 85 |
| 4 -வாரத்தில் | 75 | - | - |
| 8 -வாரத்தில் | 75 | - | 85 |
| 12 -வாரத்தில் | 75 | - | - |
| 4 வாரத்திற்கு ஒரு தடவை | 75 | - | 45 |
| 26 வாரத்திற்கு ஒரு தடவை | - | 165 | - |

பல கிருமிகள் (இலைகளை ஓட்டையாக்கும் பூச்சிகள்) கிளைகளிலே உயிர்வாழ்ந்து, இலைகளின் சாற்றை உறிஞ்சிக் குடிப்பதினால் பாதிப்பை ஏற்படுத்தும். விதை 'டைமெதொயோட்' 40 கிருமிநாசினியைத் தெளிப்பதன் மூலம் தடுத்துக்கொள்ளலாம்.

சிறப்பான சுண்டங்கத்தரிக்காயை உற்பத்தி செய்ய வேண்டுமானால், விதைகளின் ஊடாக கன்றுகளைப் பயிரிட்டு, ஐந்து மாதங்களில் இதன் பலனைப் பெறலாம். மேலும், வளர்ச்சி குறைந்த பயிர்களில் விளைச்சலைப் பெற பலகாலம் செல்லும்.

விளைச்சலைப் பெறும்போது சுண்டங்கத்தரிக்காய்களை முற்றவிடாமல், விளைச்சலைப் பெற்றுக்கொள்ளவேண்டும். சுண்டங்கத்தரிக்காய் கொத்துகளை சிறிய கத்தரிக்கோலாலோ அல்லது கத்தியாலோ வெட்டிக் கொள்ளலாம். இல்லாவிட்டால், காய்களைத் தனியாகப் பிடுங்கியும் கொள்ளலாம்.

மேலும் சுண்டங்கத்தரிக்காய்களைக் கொத்துக்களாக வெட்டி எடுக்கும்போது, ஒரு கொத்தில் இருக்கும் காய்களில் 90 வீதமான காய்கள் அளவு பெருத்து இருந்தால், விளைச்சலைப் பெற்றுக்கொள்ளலாம். பெருமளவில் பயிரிடும்போது இவ்வாறு பெறலாம்.

சிறிய உற்பத்தியின்போது, காய்கள் அளவாகப் பெருத்து இருப்பதைக் காணலாம். அதனை வெவ்வேறாக உடைத்துக் கொள்ளலாம். 5-8 நாட்களுக்கு ஒரு தடவை விளைச்சலைப் பெற்றுக்கொள்ளலாம். சாதாரணமாக மழை உள்ள குளிர்மையான வெப்பநிலையிலும் மற்றும் வரண்ட வெப்பநிலையிலும் விளைச்சல் குறைவதோடு, ஈரவெப்ப நிலைக்குப் பின்பு வரும் வரண்ட வெப்பநிலையின்போது விளைச்சல் அதிகமாகும்.

சிறப்பாக சுண்டங்கத்தரிக்காய் உற்பத்தியினால் வருடத்திற்கு ஹெக்ரெயர் ஒன்றுக்கு 3 இலட்சம் ரூபா வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

**சசி சந்திரகாசன்**

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 50/= | 70/= | 60/= | 60/= | 45/= | 50/= | 60/= |
| வெண்டிக்காய் | 30/= | 35/= | 30/= | 25/= | 40/= | 20/= | 35/= |
| உருளைக்கிழங்கு | 80/= | 80/= | 70/= | 80/= | 70/= | 75/= | 75/ |
| கத்தரிக்காய் | 55/= | 60/= | 60/= | 50/= | 35/= | 50/= | 40/= |
| பாகற்காய் | 60/= | 60/= | 60/= | 55/= | 50/= | 60/= | 60/= |
| கரட் | 80/= | 45/= | 80/= | 60/= | 60/= | 80/= | 70/= |
| பீற்றூட் | 30/= | 30/= | 40/= | 40/= | 45/= | 20/= | 40/= |
| முருங்கக்காய் | 140/= | 100/= | - | 130/= | 120/= | 160/= | 120/= |
| வெங்காயம் | 40/= | 50/= | 60/= | 50/= | 70/= | 50/= | 70/= |
| பச்சை மிளகாய் | 35/= | 40/= | 40/= | 50/= | 40/= | 35/= | 40/= |

செய்திக்கட்டுரை

ந.கஜமுகன்

# மீள்புனரமைப்பு செய்யவேண்டிய நிலையில் தொன்மைச் சிறப்பு மிக்க ஒரு ஆலயம்



தென்மராட்சிப் பிரதேசத்தில் மிகவும் தொன்மையான ஆலயமாக காணப்படுகின்ற ஆலயம் சாவகச்சேரி சந்திரசேகரவாரிவணநாத சிவன் ஆலயமாகும்.

இந்த ஆலயத்தில் நாளாந்த பூசைகள், நைமித்திய, நித்திய கிரிகைகள் என்பவற்றைக் கணடுகளிப்பதற்கு ஏராளமான பக்தர்கள் வந்து கூடுவார்கள்.

ஆலயத்தின் மஹோற்சவ தினம் நடைபெறும் சமயத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் இருந்து மட்டுமன்றி, ஏனைய பிரதேசத்தில் இருந்தும் அடியார் கூட்டம் அலை அலையாகத் திரண்டு சிவனின் அருட்கடாட்சத்தைப்பெற ஒன்று சேர் வார்கள்.

சிவபெருமானுக்கு உரிய சிறப்பான நாட்கள், விரதங்கள், அனுஷ்டானங்கள் என்றால் இந்த ஆலயம் களைகட்டிவிடும். இந்த ஆலயத்துக்கு வருகின்ற அடியவர்களின் குறையைப் போக்கி, நிறைந்த அருளைத் தருவதில் சிவபெருமான் அருட்கடாட்சம் நிறைந்தவராகவும், ஆன்ம ஈடேற்றம் தருபவராகவுமுள்ளார்.

ஆன்மாக்களுக்கு ஈடேற்றம் தருகின்ற ஆண்டவன் இருக்கும் இந்த ஆலயத்தில் அடியார்கள கூடுவதற்கும், அடியார்களை மழை வெய்யிலில் இருந்து பாதுகாப்பதற்கும் உரிய வசதிகள் காணப்படவில்லை என்பதே தற்போது காணப்படுகின்ற குறைபாடாகவுள்ளது.

ஆலயம் அமைக்கப்பட்ட வேளையில் நிறைநத வசதிகளுடன் காணப்பட்டது. தற்போது சுவர்கள் இடிந்த நிலையில், கற்குவியலகளாகவும் காணப்படுகின்றன. ஆலயத்தில் சில இடங்களில் கூரைகளே காணப்படவில்லை. வானமே கூரையாக காணப்படுகின்றன.

ஆண்டவன் இருக்கும் ஆலயத்துக்கே இந்தக்கதியா என அடியவர்கள் அங்கலாய்க்கின்றனர். போதிய நிதியைத்திரட்டி ஆலயத்தை மீள்புனரமைப்புச் செய்வதற்கு அடியார்கள் ஆவலாகவுள்ளனர்.

சந்திரசேகர வாரி வனநாத சிவன் ஆலயத்துக்கு தற்போதைய நிலை ஏற்படக்காரணமாயிருந்தது 2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தமாகும். இந்த யுத்தத்தின் போது பாரிய சேதங்களை இந்த ஆலயம் சந்தித்தது.



ஆறுகாலப் பூசைகளும், விரதஅனுஷ்டானங்களும் நடைபெற்ற இந்த ஆலயத்தில் தற்போது ஒரு வேளையே பூசை இடம் பெற்று வருகின்றது. இந்தப் பூசையும் பல சிரமங்களின் மத்தியிலேயே இடம்பெறுகின்றது.

சனீஸ்வரன்சிலை, நவக்கிரகங்களின் சிலைகள், எனப் பல்வேறு சிலைகளும் அழகிய சிற்பங்களும் அமைந்து காணப்பட்ட இந்த ஆலயத்தில் தற்போது எதுவித சிலைகளும் இன்றி காணப்படுகின்றது.

பக்தர் வெள்ளம் நிறைந்த இடத்தில் மழை வந்தால் வெள்ளம் நிரம்பி, - பக்தர் செல்ல முடியாத நிலைமை தென்மராட்சி மக்களுக்கு மன வேதனை அளிப்பதாகக் காணப்படுகின்றது.

தேர், சப்பறம், சகடை என்பன பாரிய சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன. கோயிற் தளபாடங்கள், உபகரணங்கள், வாகனங்கள் என்பனவும் பயன்பாட்டுக்கு உதவாத நிலையில் உள்ளன.

கோயிற் தேவைகளுக்கு இத்தகைய பொருட்கள் இல்லாத நிலைமை மன வேதனை அளிப்பதாகவுள்ளது. இவ்வாறு ஆலயத்தின் பிரதம குருவான பிரம்மஸ்ரீ தட்சணாமூர்த்தி சர்மா - கவலையோடு தெரிவித்தார்.

ஆலயத்தைப் பாதுகாக்கும் வாயிற் கதவுகள் கூட எறிகணை வீச்சுக்களில் சேதமடைந்த நிலையில உள்ளன. இதனால், எஞ்சியுள்ள பொருட்களைக் கூட பாது காக்க முடியாதநிலை வேதணையைத் தருவதாக உள்ளது.

ஆலய பிரதம குரு வசிக்கும் கட்டடமும் முற்றாக சேதமடைந்துள்ளது. ஆலயத்தின் முருகன் கோயில், கிருஸ்ணர் கோயில் முன்கோபுர வாயில், மடப்பள்ளிச்சுவர், சுற்றுமதில் என்பனவும் பாரிய சேதத்துக்கு உள்ளாகியுள்ளன.

ஒட்டுமொத்தமாக இந்த ஆலயத்தின் மீள் புனரமைப்புப் பணிக்கு குறைந்தளவு 50 இலட்சம் ரூபா வரை தேவைப்படுமென கணக்கிடப்பட்டுள்ளது.

இதனை விட தர்போது கடடடங்கள் இடிந்த நிலையிலும், சேதமுற்ற நிலையிலும் காணப்படுவதால், இந்த ஆலயத்துக்கு வருகை தரும் அடியார்களின் எண்ணிககை குறைவாகவே காணப்படுகினறது.

அடியார்களின் எண்ணிக்கை குறைவுக்குக் காரணம் அவர்களிடையே உள்ள அச்சநிலையேயாகும்.

ஆலயத்தைச் சூழ உள்ள பற்றைகளும், ஆலயத்துக்குள்ளேயுள்ள பற்றைகளும் இன்னமும் அகற்றப்படவில்லை. இவற்றில் தொடர்ந்தும் மிதிவெடிகள் காணப்படலாம் என்ற அச்சமும் மக்கள் ஆலயத்துக்கு செல்வதற்கு அஞ்சுகின்ற காரணங்களில் ஒன்றாகவுள்ளது.

இந்த நிலையில் ஆலயபுனரமைப்புப் பணிகளைச் செய்வதற்கும், ஆலயத்தை முன்னைய நிலைக்கு கொண்டு வருவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியமான பணியாகவுள்ளது.

ஆலயங்களை மீளப் புனரமைப்புச் செய்வதற்கு நிதிகள் ஒதுக்கியவர்கள் கண்களுக்கு, இந்த ஆலயம் எவ்வாறு புலப்படாமல் போனது என்பதே தென்மராட்சி மக்களிடையே தற்போது உள்ள ஒரேயொரு கேள்வியாகும்.



இந்த ஆலயத்தின் பூசைகள் மீண்டும் இடம் பெறவும், அடியார்கள் ஆலயத்தை நோக்கிச் செல்லவும் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் அதற்கு வாரிவனநாதசிவன் அருள்புரியட்டும்.

---

செய்திக்கட்டுரை

கண்ணன்

# அவசர மருத்துவத் தேவைக்கு நெடுந்தீவு மக்களின் எதிர்பார்ப்பு



தீவுப்பகுதி மக்களின் அ‹ சர மருத்துவ தேவைக்கென உருவாக்கப்பட்ட அம்புலன்ஸ் படகு இதுவரைக்கும் சேவையில் ஈடுபடாமல் கடந்த ஒரு வருடகாலமாக பழுதடைநத நிலையில் ஊர்காவற்துறைப் பகுதியில் கரையேற்றி விடப்பட்டுள்ளது.

நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு பகுதியைச் சேர்ந்த அவசர நோயாளிகளை ஏற்றும் நோக்குடன் அமைக்கப்பட்டு வெள்ளோட்டம் இடம் பெற்ற போதே பழுதடைந்துவிட்டது. அதன் பின்னர் அந்தப் படகினை உரியவர்கள் பராமரிக்காது விட்டமையால், படகினுள் நீர் புகுந்து இயந்திரப் பகுதியை மேலும் பழுதடைய வைத்துள்ளது.

இந்தப் படகானது சீரான போக்குவரத்து சேவைகள்இன்றியும், வசதிகளுடன் கூடிய வைத்தியசாலை இன்றியும் தவிக்கின்ற நெடுந்தீவு மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இந்தப் படகு சேவை அமைந்திருந்தது என்பது இங்கே சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

தற்போது நெடுந்தீவில் உள்ள அவசர நோயாளர்களை சாதாரண பயணிகள் படகு மூலம் சுமார் 2 மணி நேரங்கள் பயணித்தே கடல் தாண்டிச் செல்ல வேண்டி உள்ளது. இந்த நிலையால் மிகவும் அவசர நோயாளிகளின் உயிருக்கே ஆபத்து ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளது.

இந்தப் படகினை ஊர்காவற்துறை சுகாதார வைத்திய அதிகாரியின் பொறுப்பிலே, ஊர்காவற்துறை துறைமுகத்திலே தரித்து நிற்க விட்டு, தகவல் கிடைத்ததும் உரிய இடங்களுககு வந்து நோயாளர்களை ஏற்றிச் செல்லும் ஒழுங்குகளே படகு கட்டப்பட்ட காலத்தில் செய்யப்பட்டிருந்தது, ஆனால் தற்போது அது செயற்படாமலேயே போயவிட்டது.

இதேவேளை ஏனைய தீவுகளை விடவும் நெடுந்தீவுப் பகுதி மிகவும் தொலைவிலே இருப்பதாலும், சீரான போக்குவரத்து வசதிகள் இன்றி இருப்பதாலும் இந்த அம்புலன்ஸ் படகினை நெடுந்தீவிலே தரித்து நிற்க ஒழுங்குகள் செய்யுமாறு - அப்போது பலராலும் கோரிக்கை விடப்பட்டும் அது வீணாகிப்போனது.

இதேவேளை இந்த வருடம் அரசாங்க அதிபர் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நெடுந்தீவுக்கு வந்த வேளையில் பல அரச சார்பற்ற பிரதிநிதிகளால் 'அம்புலன்ஸ்' படகினை உடனே திருத்தம் செய்து நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையின் பொறுப்பிலே நெடுந்தீவில் தரித்து நிறுத்துவதற்கு ஆவன செய்யுமாறு கோரிக்கைகள் விடப்பட்டது.

தற்போது இந்தப் படகின் திருத்த வேலைகள் இடம்பெற்று வருவதாகவும், முடிவடைந்ததும் குறிகட்டுவான் துறைமுகத்திலே தரித்து நிற்குமெனவும், எந்தத் தீவில் இருந்து தகவல் கிடைக்கிறதோ அங்கே உடனடியாகச் சென்று சேவையாற்றும் எனவும் தெரிய வருகிறது.



எது எவ்வாறாயினும் படகுச் சேவையில் ஈடுபடும் போது தான் அதன் சேவை பற்றியும், எதிர்காலம் பற்றிச் சிந்திக்கவும், செயற்படவும் முடியும், எப்போது சேவையில் வருமென எதிர்பார்த்துள்ளனர் நெடுந்தீவு மக்கள்.....!

---

# கோர ரயில்விபத்தில் 25 பேர் பலி நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயம்!

## கர்நாடகத்தில் சம்பவம்

கர்நாடக மாநிலம் மங்களூரில் இருந்து மும்பை நோக்கி 'மித்சயகந்தா எக்ஸ்பிரஸ்' ரெயில் சென்று கொண்டு இருந்தது. இன்று காலை மும்பையில் இருந்து 150 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ரோகா மற்றும் வீர் ரெயில் நிலையங்களுக்கு இடையே ரெயில் சென்றது.



அப்போது பலத்த மழை பெய்து கொண்டு இருநதது. காரன்ஜாடி என்ற இடத்துக்கு அருகே உ ள ஆற்றுப் பாலத்தில் ரெயில் சென்ற போது, இருந்த தண்டவாளத்தில் 2 பெரிய பாறாங்கல் கிடந்தன.

இதன் மீது ரெயடல் வேகமாக மோதியதில் என்ஜின் மற்றும் 10 பெட்டிகள் கவிழ்ந்தன. இதில் என்ஜினும், சில ரெயில் பெட்டிகளும் பாலத்தில் இருந்து அந்தரத்தில் தொங்கின.

இந்தக் கோர விபத்தில் 25 பேர் பலியானார்கள் 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இந்த விபத்து காலை 6 மணி அளவில் நடந்தது.

ரயில் கவிழ்ந்த நேரம் அதிகாலை என்பதால் பயணிகள் பெட்டியில் தூங்கிக் கொண்டு இருந்தனர். அவர்கள் விபத்து நடந்ததும் சத்தம் போட்டு கதறினர்.

பாலத்தில் தொங்கிக் கொண்டு ரெயில் பெட்டியில் இருந்து வெளியேவர முடியாமல் பயணிகள் பலர் தவிர்த்தனர். பாலத்தின் கீழே உள்ள ஆற்றில் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. அதில் பலர் குதித்து உயிர் தப்பினர்.

கொங்கன் ரெயில்வே மனேஜர் டி.ராஜாராம் விபத்து நடந்த இடத்திற்கு சிறப்பு ரெயில் மூலம் உடனடியாக விரைந்து சென்றார்.

கடந்த சில நாட்களாகப் பெய்யும் மழை காரணமாகத்தான் ரயில் கவிழ்ந்ததாகவும் ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால், தண்டவாளத்தில் பாறாங்கல் கிடந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது அங்கு பலத்த மழை பெய்து கொண்டு இருப்பதால், மீட்புப்பணி பாதிக்கப்பட்டுள்ளது. காயம் அடைந்தவர்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுக்க டொக்டர்கள் விரைந்து சென்றுள்ளனர்.

---

# சுப. இளவரசனை விடுதலை செய்யாவிடின் ரயில் நிலையங்கள் தகர்க்கப்படும்!

## - தமிழ் தீவிரவாதிகள் எச்சரிக்கை -

தமிழக விடுதலைப் படைத் தலைவன் சுப.இளவரசன், சமீபத்தில் வீரப்பனைச் சந்திகக காட்டுக்குள் சென்றபோது, அதிரடிப்படை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் இருந்த ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

சுப.இளவரசனை விடுதலை செய்யவேண்டும். இல்லாவிட்டால் தமிழ்நாட்டில் உள்ள ரெயில் நிலையங்களை வெடிகுண்டு வைத்து தகர்ப்போம் என்று தமிழ்த் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

புதுக்கோட்டை ரயில் நிலையத்துக்கு இது பற்றி மர்மக் கடிதம் எழுதி இருந்தனர். இதையொட்டி மதுரை, ராமநாதபுரம், விருதுநகர் உட்பட தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து ரயில் நிலையங்களுக்கும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பயணிகள் பலத்த சோதனைக்கு பின்பே பயணம் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். மெட்டல் டிடெக்டர் மூலமும் சோதனை நடத்தப்படுகிறது.

ரயில் நிலையங்களுக்கு 24 மணி நேர பாதுகாப்புக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பொலிஸார்ரயில் நிலையங்களின் அனைத்துப் பகுதிகளிலும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். தண்டவாளங்களையும் பொலிஸார் கண்காணித்து வருகிறார்கள். ரயில் நிலையங்களுக்கு வரும் ரயில்கள் மற்றும் புறப்படும் ரயில்களின் அனைத்துப் பெட்டிகளையும் மோப்ப நாய்கள மூலம் பொலிஸார் பலத்த சோதனை நடத்திய பின்னரே பயணிகளை அனுமதிக்கிறார்கள்.

பயணிகள் எடுத்துச் செல்லும் பொதிகள், மற்றும் பொருட்களும் சோதனைக்குப் பின்பே அனுமதிக்கப்படுகிறது. சந்தேகிக்கப்படும் நபரை பொலிஸார் தனியாக அழைத்துச் சென்று விசாரணை நடத்தி வருகிறார்கள். சென்னை, மதுரை, திருச்சி உட்பட முக்கிய ரயில் நிலையங்கள் உஷார்படுத்தப்பட்டுள்ளது. நடைபாதைகளில் துப்பாக்கி ஏந்திய பொலிஸார் கண்காணித்து வருகின்றனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற*
*செய்யாமை செய்யாமை நன்று.*

திருக்குறள்

# நமது நோக்கு

## பொய்ப்பிரசார யுத்தத்தில் அரச சார்பு ஊடகங்கள்....

கடந்த ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக் கால்த்தில் போர் நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்னர், அரச மற்றும் அரச சார்பு ஊடகங்களின், தமிழ் மக்களைக் குழப்பத் திலாழ்த்தி அவர்களை உளவியல் ரீதியில் பாதிக்க வைக்கும் திட்டத்துடன் கூடிய பிரசார நடவடிக்கைகள் அரச மற்றும் அரச சார்பு ஊடகங்களில் வெகுவாகக் குறைந்திருந்தன.

1980 களின் மத்தியில் ஆரம்பமாகி தீவிரம் கொண்ட தமிழ் மக்களுக்கும் அவர்களின் விடுதலைப்போராட்டத்திற்கும் எதிரான இலங்கை அரசினதும், அதற்கு சார்பான வெகுசன தொடர்பு ஊடகங்களினதுமான பொய்ப்பிரசார யுத்த நடவடிக்கையானது தமிழ் மக்களை அச்சுறுத்துவதையும், சிங்கள அப்பாவிமக்களைப் பேய்க்காட்டுவதையும் குறிக்கோளாகக் கொண்டு இயங்கின.

அப்போதெல்லாம் 'லங்காபுவத' என்ற சிங்கள செய்தி நிறுவனம் பொய்யான செய்திகளை கற்பனையில் ஊருவாக்கி வடக்கு - கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக வெளியிட்ட தகவல்கள் தமிழ் மக்களை பெரும் பீதிக்கும் குழப்பத்திற்கும் உள்ளாக்கியமை குறிபிடத்தக்கதாகும்.

ஒரு போராளி வீரச்சாவைத் தழுவினால் 10 போராளிகள் கொல்லப்பட்டார்கள் என்றும் 10 பொதுமக்களை இராணுவம் கொன்றால், அவர்களைப் போராளிகள் என்று திரித்துக் கூறியும், நூற்றுக்கணக்கில் இராணுவத்திற்கு இழப்பு ஏற்பட்டாலும், இழப்பேதும் இல்லையென்றும் 'லங்காபுவத் உளறியதை நாடறியும்.

இதற்கு மேல் இராணுவப் பேச்சாளரை ஆதாரம் காட்டியும், பாதுகாப்பு அமைச்சை, கூட்டுப்படைத் தலைமையகத்தை ஆதாரம் காட்டியும் அவ்வப் போது அரச மற்றும் அரச சார்பு ஊடகங்கள் ஆக்கிய அலம்பல்கள் ஒரு கட்டத்தில் தமிழ் மக்கள் தெளிவடைந்த நிலையில் அவர்களுக்கு பெரும் நகைச்சுவை விருந்தாகவும் இருந்தன.

இந்த வகையில் லலித் அத்துலத்முதலி, ரஞ்சன் விஜேரத்ன, அநுருத்த ரத்வத்தை, சரத்முனசிங்க போன்ற முன்னாள் இலங்கை அரசுகளின் பாதுகாப் புக்கட்டமைப்பின் முக்கியஸ்தர்களும், பேச்சாளர்களும், இராணுவ நடவடிக்கைகள், மற்றும் யுத்த நகர்வுகள் குறித்து வெளியிட்ட செய்திகளும் அறிக்கைகளும் தமிழ் மக்களின் கேலிக்குரியவையாக விளங்கிய போதிலும் சிங்கள மக்களின் அப்பாவித்தனம் அவற்றை நம்பி ஏமாறவைத்ததும் வரலாற்றுப் பதிவுகளாக உள்ளன.

பிரேமதாஸ ஆட்சிக்காலத்தில் 'மக்கள் குரல்' என்ற பெயரில் தமிழ் மக்களை ஏமாளிகள் என நினைத்து ஒலிபரப்பிய விசேட வானொலி நிகழ்ச்சிகள் அரசசார்பு ஊடகங்களின் கோமாளித்தனத்தின் உச்சக்கட்டமாகும். இதேவேளை அரசாங்கத்தின் அதிகாரமுள்ள பேச்சாளர்கள், செய்தியாளர்கள் பலரும் ஜேர்மனியில் இரண்டாம் உலகப் போரின் போது ஹிட்லரின் பிரசாரப் பீரங்கியாக விளங்கிய உலகைக் கதிகலங்க வைத்த பொய்ப்பிரசாரச் சக்கரவர்த்தியான 'கோயபல்ஸ்'சையே தூக்கிச் சாப்பிடும் அளவுக்கு பொய்யே உருவானவர்களாக விளங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பொய்யர்களின் பிரசாரங்கள் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு கட்டத்தின் பின் முற்றிலும் எடுபடாமல் தோல்வியடைந்தது என்பது வேறு விடயம். ஓயாத அலைகள் மூன்றின் பின் அரச பிரசாரங்களின் பொய்மை சிங்கள மக்கள் மத்தியிலும் வெட்டவெளிச்சமாகியது.

2002 இல் நடைபெற்ற தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணியின் தோல்விக்கு அதன் கடந்த கால பொய்ப் பிரசாரங்கள் வெளிச்சத்திற்கு வந்தமையும் ஒரு காரணமாகும்.

இப்போது ஆட்சிபீடம் ஏறியுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இந்த இரண்டரை மாதகாலப் பகுதிக்குள் அறுதிப்பெரும்பான்மை பலமற்ற ஒரு அரசை கொண்டு நடத்தும் திராணியற்ற நிலையில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க விருப்பும் துணிவுமற்ற சூழலில் மீண்டும் நாட்டினை 1990களின் இறுதிப் பகுதியில் நிலவிய சூழலுக்கு கொண்டு செல்கின்றதோ என்ற அச்சம் உருவாகியுள்ளது.

மீண்டும் அரச மற்றும் அரசசார்பு ஊடகங்கள் ஊடாக புதிய பொய்ப்பிரசார உளவியல் நடவடிக்கைகளை அரசு ஆரம்பித்துள்ளமையை கருத்தில் கொண்டு பார்க்கும் போது இந்த அச்சம் நியாயமானதொன்றாகவே உள்ளது.

மட்டக்களப்பில் கருணா கும்பலின் செயற்பாடுகளை வைத்துக்கொண்டு அரசியல் அநுகூலம் அடைய முயன்ற அரசு, அதனை ஒரு பாரிய பிரசார யுத்தத்தின் மூலமாகப் பயன்படுத்த முனைந்த போது கருணாவும் அவர்சகாக்களும் கிழக்கை விட்டு ஓட்டம் பிடித்தமையானது அரசுக்கு பெரும் ஏமாற்றம் தரும் விடயமாகவே இருந்தது.

ஆனாலும் அரசு அந்த நடவடிக்கையை கதிர்காமரின் கண்காணிப்பில் தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதாக வரும் செய்திகளை நிராகரிக்க முடியாது.

கடந் இரு தினங்களாக கிழக்கில் தொப்பிகல காட்டுப் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் கருணா கும்பலுக்கும் இடையே கடும் சண்டை நடப்பதாகவும் விடுதலைப்புலிகள் பாரதூரமான இழப்புக்களைச் சந்தித்துள்ளதாகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரீ.பி.சி வானொலி சேவைகள் போன்ற ஊடகங்கள் பொய்யான செய்திகளை உளறி வருகின்றன.

இது மீண்டும் தமிழ் மக்களை இலக்குவைத்து கிழக்குப் பிரச்சினையை மையப்படுத்தி திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் உளவியல் ரீதியிலான பிரசாரயுத்த நகர்வேயாகும்.

விடுதலைப்புலிகள் இதனை நிராகரித்து கண்டித்துள்ள போதும் இந்தப் பிரசாரம் தொடரவே செய்வதானது போர்ச் சூழலை மீண்டும் ஏற்படுத்தவைக்கும் ஒரு சதியேயாகும். போர்நிறுத்த உடன்பாட்டைக் கொச்சைப்படுத்தும் நடவடிக்கையுமாகும்.

இது குறித்து மக்கள் விழிப்பாக இருத்தல் இன்றைய காலத்தின் தேவையாகும்.

# நாடும் நடப்பும்

*செய்தி:* விடுதலைப்புலிகளின் கடற்பயணத்திற்கு கடற்படையினர் தடை




# சமாதான முயற்சிகள் தொடர்பாக கருத்துக்கூற அரசு தடுமாறுகிறது

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி.க்கு விட்டுக்கொடுத்து செயற்பட்டுவருவதன் காரணமாகவே, சமாதான முயற்சிகள் குறித்து நிலையான கருத்துக்களை கூறமுடியாமல், அரசாங்கம் தடுமாறிவருவதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டின்போதே கட்சியின் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

சமாதானம் தொடர்பாக அரசாங்கத்துக்கு நிலையான கொள்கைகளோ, பிடிப்போ இல்லையெனவும், இதன் காரணமாகவே அது முன்னுக்குப் பின் முரணாகச் செயற்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சமாதான முன்னெடுப்புக்கள் ஐக்கிய தேசியக்கட்சியால் முன்னெடுக்கப்பட்டபோது அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அது தொடர்பாகப் போதிய விளக்கமளிக்கப்பட்டது.

ஆனால், தற்போதைய அரசாங்கம் எவருக்கும் எதுவும் தெரிவிக்காமல் நாளுக்கு நாள் முரண்பட்ட கருத்துக்களை கூறிவருவதாகவும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், குற்றஞ்சாட்டினார்.

# இலங்கைக்கு கடத்துவதற்கு முயன்ற மாத்திரைப் பொதிகள் கரையொதுங்கின

இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்குக் கடத்த முயன்ற 1000 இற்கும் மேற்பட்ட மாத்திரைகள் அடங்கிய பொதிகள் கடற்கரையில் கரை ஒதுங்கின. இலங்கைக்குக் கடத்தப் பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இராமேஸ்வரம் தெற்குவாசல் கடற்கரைப் பகுதியில் 10 மாத்திரைகள் கொண்ட நூற்றுக்கும் மேற்பட்ட பொதிகள் கரையொதுங்கிக் கிடந்தன.

இது குறித்து தகவலறிந்தவுடன், கோவில் காவல் நிலைய சப் - இன்ஸ்பெக்டர் புகழேந்தி மற்றும் பொலிஸார் கடற்கரைக்குச் சென்று ஒதுங்கியிருந்த மாத்திரைகளைப் பார்வையிட்டு சேகரித்தனர்.

இந்த மாத்திரைகள் சேகரித்ததில் சாக்கு மூடை நிறையக் கிடைத்தது. மேலும் மாத்திரையில் அமெரிக்கன் ரீமெடிஸ் எனவும், சென்னை எல்.பி.ரோட் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த மாத்திரைகள் வலி, வீக்கத்திற்கும், உடல் உற்சாகம் ஏற் படுத்துவதற்காகவும் உட்கொள்ளப்படக்கூடிய மாத்திரைகள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மாத்திரைகளை - இராமேஸ்வரம் கடற்கரையில் இருந்து இலங்கைப் போராளிகளுக்குக் கடத்தி செல்வதற்காகப் படகில் ஏற்றிச் சென்றபோது, கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பால் மாத்திரைப் பொதி தவறிக் கடலில் வீழ்ந்திருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

மேலும் இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு அகதிகளை ஏற்றிவிடுவதும், அவர்களுடன் பொதிகள், மாத்திரைகள் மற்றும் புடவைகளைக் கடத்திவிடுவதும் உள்ளுர் கடத்தல் காரர்கள் வாடிக்கையாக வைத்துள்ளனர்.

இது தொடர்பாகப் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இலங்கையில் புதிய கட்சியொன்று உதயம்

(கொழும்பு)

சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி., ஐக்கிய தேசயக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய பிரதான சிங்களக் கட்சிகளிலும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலும் அதிருப்தியடைந்த அங்கத்தவர்கள் ஒன்றிணைந்து, இரு பிரதான கட்சிகளான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றுக்குச் சவாலாக, ஜனநாயக ஐக்கிய முன்னணி என்ற புதியதொரு கட்சியை நிறுவியுள்ளனர்.

விரைவில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களில் ஜன நாயக ஐக்கிய முன்னணி என்ற கட்சியின் கீழ் போட்டியிடவுள்ள இந்த அங்கத்தவர்கள், விரைவில் பிரதான இரு பெரும்பான்மைக் கட்சிகளுக்கும் தலைவலி கொடுக்கக்கூடிய மூன்றாவது கட்சியாக உருவெடுக்கும் என்று கருதப்படுகிறது.

# புலிகளின் குற்றச்சாட்டுக்கு ஜனாதிபதி செயலகம் மறுப்பு

சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா இரட்டை வேடம் பூணுவதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்த குற்றச்சாட்டினை ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது, இடைக்கால நிர்வாக சபை தொடர்பான பேச்சுக்களும், இறுதித்தீர்வு தொடர்பான பேச்சுக்களும் சமாந்தரமாக இடம்பெறவேண்டுமென்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடெனவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின்போதே, சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக ஆக்கபூர்வமான முடிவுகள் எட்டப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி செயலகம், சமாதான நடவடிக்கைகளை விரும்பாத சில சக்திகளே இத்தகைய தவறான செய்திகளை வெளியிட்டுவருவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கருத்து வெளியிட்டபோது- ஜனாதிபதி செயலகத்தின் இந்த அறிக்கையில் எந்தவித உண்மையும் இல்லையெனத் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பின்போது, இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக முதலில் பேசிய பின்னரே இறுதித்தீர்வு குறித்து ஆராயப்படுமென ஜனாதிபதி தம்மிடம் உறுதியளித்ததாகவும் சுரேஸ் பிரேமச்சந்திரன் செரிவித்தார்.

வரணிவயூர் எஸ்.ஜெயா

# சந்திரிகாவின் சாதனையும் ஊடகங்களின் வேதனையும்



ஊடகப்படுகொலை இரண்டு. ஒன்று வடக்கில், மற்றையது கிழக்கில், இரண்டுக்குமான ஒற்றுமை சந்திரிகா காலத்து சாதனையாகும். படுகொலையான இரண்டு தமிழ் ஊடகவியலாளர்களும் தமிழரின் உரிமைக் குரல்கள் உலகறிந்த செய்தியாளர்கள்.

ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலையானது தமிழ்க்கட்சி ஒன்றினால் நன்கு திட்டமிடப்பட்டு செய்யப்பட்ட தொன்றாகும். இதேபோன்று, ஊடகவியலாளரான நடேசனின் படுகொலை தமிழ் குழு ஒன்றினால் புரியப்பட்ட அட்டகாசமாகும்.

இவை இரண்டுக்குமே அரசின் ஆசீர்வாதமும், அக்கறையும் நன்றாக இருந்திருக்கின்றன. இத்தகையதொரு உறுதிப்பாட்டினை எடுப்பதற்கு கொலை நடந்த இடமும், அதன் சுற்றயல் பாதுகாப்பு நிலைமைகளும் கட்டியங் கூறுகின்றன.

நடேசன் படுகொலையானது, அரச படைகளின் பாதுகாப்பு வேலிக்கு அண்மையிலேயே இடம்பெற்றதோடு, அவர்கள் தப்பிச் செல்வதற்கு அவர்களின் பரிவும் கிடைத்திருக்கின்றது. அப்படியல்லாது போனால் இத்தகைய கூலிப்படைகள் ஆயுதத்துடன் உள்நுழைவதற்கும் சுட்டுவிட்டு வெளியேறுவதற்கும் சந்தர்ப்ப சூழ்நிலை எவ்வாறு இடங்கொடுத்தது. இதேபோன்றே நிமலராஜன் படுகொலை இடம் பெற்றமை பலர் அறிந்ததே.

இவ்வாறே இந்த நிலமை தொடருமானால், ஊடகவியலாளரின் எதிர்காலம் என்ன ஆவது? அவர்களின் சுயபாதுகாப்பிற்கு யார் உத்தரவாதம்? செங்கோன்மை செய்து காக்க வேண்டிய அரசனே கொடுங்கோன்மைக்கு வக்காளத்து வாங்கினால் குடிகள் எங்கு செல்வது?

அது சிந்திக்கப்பட வேண்டியதொன்றாகும். எனினும் இத்தகைய கொடிய மரணம் எனும் தீர்ப்பினைக் கொடுப்பதனூடாக ஊடகவியலாளர்களைக் கட்டுப்படுத்தலாம் என, எண்ணினால் அந்த எண்ணத்தை இன்றே புதைகுழியில் போட்டுப் புதைத்துவிடுங்கள்.

> **ஊடகவியலாளர்களுக்கு, எதிராக எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைகளும் அவர்களைப் பலப்படுத்துமே ஒழிய, பயமுறுத்தமாட்டாது என்பதை மனதில் இருத்திக்கொள்ளுங்கள். இவர்களுக்கு நாடு, தேசம், மொழி ,இனம் மதம் என்ற எந்த கட்டுப்பாடுகளும் இல்லை. ஊடகவியலாளர்கள் என்ற ஒரே**

ஊடகவியலாளர்கள் ஒரு சுதந்திரப் பறவைகள். அவர்கள் உண்மைக்காக உழைக்கும் உத்தமர்கள். நேர்மைக்காக தமது உயிர்களை துச்சமாக எண்ணுபவர்கள். இவர்கள் விழவிழ எழுவார்கள். கத்தியின்றி, இரத்தமின்றிப் பேனா முனையில் யுத்தம் புரிபவர்கள்.

இவர்களுக்கு எதிராக நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைகளும் அவர்களைப் பலப்படுத்துமே ஒழிய, பயமுறுத்த மாட்டாது என்பதை மனதில் இருத்திக்கொள்ளுங்கள். இவர்களுக்கு நாடு, தேசம், மொழி ,இனம் மதம் என்ற எந்த கட்டுப்பாடுகளும் இல்லை. ஊடகவியலாளர்கள் என்ற ஒரே சாதியை உடையவர்கள்.

இந்தப் பத்தியினை எழுதும் ஊடகவியலாளர்களுக்குகூட நாளைக்கு இதேகதி ஏற்படலாம். ஆனால், அதற்காக அவர்கள் பொய்மைக்குள் உறங்கப் போவதில்லை. உண்மையை உலகறிய உரைக்கவே செய்வார்கள்.

இப்படிப்பட்ட ஊடகப் படுகொலையானது பலரை உணர்ச்சி வசத்தினுள் ஆழ்த்தியுள்ளது. ஒரு ஊடகவியலாளன் ஒரு உண்மைத் தன்மையினை வெளிப்படுத்த எப்படிப்பட்டமான, அவமானங்களையும், வேதனைகளையும், சோதனைகளையும், அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளவேண்டும் என்பது அவனுக்கே தெரிந்தவெளிச்சமாகும்.

இப்படிப்பட்ட இலட்சியவாதிகளையா வன்முறைகொண்டு அடக்க முனைகிறார்கள் ஆட்சியாளர்கள். இவர்கள் தமது நிலைகளை தக்கவைத்துக்கொள்ள ஊடகநிலைகளை தகர்த்தெறிய முனைகின்றனர்.

கடந்த காலத்தில் நிமலராஜன் படுகொலையில் ஏற்பட்ட விசாரணைத் தாமதமும், திட்டமிடப்பட்ட தடங்கல்களும் ஆட்சியிலுள்ள அரசின் மீது மக்களுக்கு சந்தேகப் போக்கினையே ஏற்படுத்தியுள்ளது. மேலும், ஒரு கட்சிக்கு நிமலராஜன் படுகொலையுடன் தொடர்புண்டு என உலகறியப்பட்டிருந்த போதும், ஜனாதிபதி அவர்கள் அமைச்சர் பதவிகொடுத்தமை மேலும் சந்தேகத்தினை வலுப்படுத்துக்கிறது.



இது புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை சந்திரிகா அரசு புரிந்து கொள்வதில் உள்ள மந்தத் தன்மையினையே எடுத்தக் காட்டுவதோடு இப்படிப்பட்ட செயற்பாடுகள் மூலம் தமிழ் மக்களைப் பிளவுபடுத்தலாம் என மனப்பால் குடிப்பதாகத் தெரிகின்றது.

இவை அனைத்தும் ஊடகவியலாளருக்கு ஒரு வேதனைதரும் நிகழ்வுகளாகவே அமைந்ததோடு, இனிமேலும் அமையப் போவதுபோல் தெரிகின்றது. அப்படியாயின், சந்திரிகாவின் சாதனைகள் தொடருமெனவே நாம் கருதவேண்டியுள்ளது.

நேற்று நிமலராஜன்
இன்று நடேசன்
நாளை யார்? ........ (அரசுதான் பதில் கூற வேண்டும்)

ஒரு படைப்பாளியின் நினைவாக... பகுதி-5 - தி.ஞானசேகரன்

# மலையக இலக்கிய மறுமலர்ச்சியில் பங்காற்றிய எழுத்தாளர் கே.கணேஷ்



**'பல்கேரியக் கவிதைகள'** (1984): பதின்மூன்று பல்கேரியக் கவிஞர்களின் கூட்டுத் தொகுதியாக இது அமைந்துள்ளது. இத் தொகுப்பில் 31 கவிதைகள் அடங்கியுள்ளன. இக்கவிதைகள் பாஸிஸ எதிர்ப்பு இயக்கமாகத் திகழ்கின்றது.

**'ஒருசோவியத் கவிஞரின் புதுக்கவிதைகள்'** (1989): இந்த மொழி பெயர்ப்புக் கவிதைநூல் கவிஞர் வி.குப்றியனோவ் என்பவரை மூல ஆசிரியராகக்கொண்டது. எதுகை மோனைக்கு உட்படாத கட்டுக்கோப்பற்ற புதிய பாணியில் ஆக்கப்பட்ட கவிதைகளின் தொகுப்பு இது. வி.குப்றியனோவின் கவிதைகள் ஐரோப்பிய நாடுகளில் மட்டுமன்றி கீழைத்தேய நாடுகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. அவற்றை அழகிய முறையிலே மொழிபெயர்த்துள்ளார் கணேஷ். இத் தொகுப்பில் 23 கவிதைகள் அமைந்துள்ளன.

> **முதுபெரும் எழுத்தாளரும் சிறந்த பத்திரிகையாளருமான கே.கணேஷ் அண்மையில் காலமானார் அவரின் நினைவாக இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

**'எத்தனைநாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே'**(1988): சண்டோர் பெட்டோ.ீ.வ்பி என்ற ஹங்கேரியக் கவிஞரின் கவிதைகள் அடங்கிய தொகுப்பு இது. இக்கவிஞரின் தனதுநாடு அந்நிய ஆட்சிக்கு உட்பட்டு அவதியுற்ற காலத்தில் பேனா ஏந்திய தன்கையாலேயே வாளும் ஏந்திப் போரிட்டு இளம்வயதிலேயே உயிர் நீத்தார். இவர் தனது நாட்டில் அந்நியர் ஆட்சியை அகற்றவும், நாட்டிலே குடியரசை நிலைநாட்டவும் பாடுபட்ட போர்வீரர். இவரது கவிதைகள் இன்று விடுதலை வேட்கை கொண்ட பல நாட்டினரதும் உள்ளக் கனலைத் தூண்டும் போர்க் கவிதைகளாக விளங்குகின்றன.

**'பாரதிபக்தன் பார்பராக் கவிதைகள'**(1989) : மகாகவி பாரதிமேல் கொண்ட மெய்க்காதலுடன் அவரைப்பற்றிப் பாடிய பார்பரா என்ற கவிஞரின் இதயதாகங்களை உள்ளடக்கியது இக்கவிதைகள். இதனைத் தமிழ் மக்களுக்கும் அறிமுகஞ்செய்து வைப்பதற்காகவே கணேஷ் இவரது கவிதைகளை மொழிபெயர்த்துள்ளார். இதில் 'இந்திய நன்நாட்டுக்கு ', 'சுப்பிரமணியபாரதிக்கு' ஆகிய கவிதைகள் உட்பட 12 கவிதைகள் அடங்கியுள்ளன.

**'உக்ரேனிய மகாகவி தராஸ் ஷெவ் சேன்கோ கவிதைகள'** (1993): இத் தொகுப்பில் 33 கவிதைகள் அடங்கியுள்ளன. தராஸ் ஒரு சிறந்த ஓவியரும், கவிஞரும் ஆவார். இவரது கவிதைகள் எளியவர்களின் துயர்மிக்க வாழ்க்கையை கருப்பொருளாகக் கொண்டு அவர் தம் துயர்போக்கும் வழிவகுத்து, அந்நாளின் மாமன்னர் ஜாரை எதிர்க்கும் உணர்வை இலக்கியத்திலே புகுத்தி மக்களிடையே ஒரு எழுச்சியையும், மறுமலர்ச்சியையும் தோற்றுவித்தன. இலக்கியத்தில் சமூக எண்ணப்போக்கில், அரசியல் உணர்வில் ஒரு புரட்சியையே தோற்றுவித்தது.

இத்தொகுப்பில் அடங்கியுள்ள 'கதெரீனா' ஒரு கவிதைக்காவியம். கிராமத்து ஏழைப் பெண் ஒருத்தி பட்ட துன்பதுயரங்களை இக் காவியம் கூறுகிறது. இத்துடன் தராஸ் ஷெவ்சேன்கோவின் வாழ்க்கையில் நிகழ்ந்த பிரதான சம்பவங்களையும், முற்போக்கு அணியுடன் அவர் கொண்டிருந்த உணர்வுகளையும் இக்காவியம் பிரதிபலிக்கிறது. 1974 இல் தராசின் 160 ஆவது ஆண்டு நினைவாக தாமரையில் 'இறுதி வேண்டுகோள்', கதெரீனா ஆகியவை வெளியாகின. பின்னர் 1986 யூலை தொடங்கி செப்டெம்பர் வரை தினகரன் வாரமஞ்சரியில் தொடர்ச்சியாக கதெரீனா வெளிவந்தது. இறுதிவேண்டுகோள் தமிழில் வெளிவந்த தராசின் முதற் கவிதையாகும்.

**'உக்ரேனிய அறிஞர் இவன் ஃபிராங்கோ கவிதைகள'**(1994): ஃபிராங்கோ, வவீங் பல்கலைக்கழகத்தில் பயின்றவர் ஆயினும் அவரது அரசியல் காரணமாக பல்கலைக் கழகத்தின் மேல் இடத்தினர் அவருக்கு கலாநிதிப்பட்டம் அளிக்கத் தயங்கினர். ஆசிரியர் தொழில்கூட மறுக்கப்பட்டது. எனினும் வியன்னா பல்கலைக்கழகம் அவருக்கு தத்துவ கலாநிதி பட்டமளித்து சிறப்பித்தது. மற்றும் பிட்டர்ஸ் பேர்க் பிரஹா விஞ்ஞானக் கழகங்கள் விருதுகள் அளித்தன. ரஷ்யாவின் கார்க்கோவ் பல்கலைக்கழகம் பட்டமளித்தது. இவரது படைப்புக்கள் 50 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. கணேஷ் இவரது கவிதைகள் சிலவற்றை இத்தொகுதியில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

தொகுப்புக்களில் வெளிவந்த கவிதைகளைவிட சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் கணேஷால் மொழிபெயர்க்கப்பட்ட பல கவிதைகள் வெளியாகியுள்ளன. ஹொசிமின் எழுதிய சதுரங்கம் (தினகரன் - 9.9.73) பண்டித நேருவுக்கு ஹொசிமித் (வீரகேசரி - 27.12.81), நெல்குத்தும் ஓசை, சந்திக்காலம், பாதை திருத்துவோர், (தமிழமுது - 1972), தராஸ் ஷெவ்செனகோவின் ஆண்டுகள் பதின்மூன்று அப்போது (சோவியத் நாடு, இல.3, 1990), கல்மிக் கவிஞர் டேவிட் குகுல்தினோவ் (1977), நல்லுள்ளம், இளவேனில் (தேசாபிமானி - 1.4.71), சோவியத் கவிஞர் அனதோலி பார்பராவின் சுப்பிரமணியப் பாரதிக்கு (வீரகேசரி), கவிதைத்தேவி, புகழ், ஜார்கள் (சோவியத் நாடு), எதிர்ப் புணர்ச்சி, சவாரிசெய்யும் உலகின் எழுகடலின் அலையதற்கு மேலே, அமைதியுற்றது ஐரோப்பா (தாமரை) ஆகியவை அவற்றுட் சில.

### சிறுவர் இலக்கியம்.

கணேஷ் அவர்களின் மொழிபெயர்ப்பில் நான்கு சிறுவர் இலக்கிய நூல்கள், சீன அயல்மொழிப் பதிப்பகத்து வெளியீடுகளாக வெளிவந்துள்ளன.

**'இன்றைய எமது கடமைகள'** (1990): சீன மொழியில் ஜங்கையா லியங்கி எழுதியது.

**'மகிழ்ச்சிமிகு குழந்தைகள்'**(1986): ஜுஸ்கின் எழுதியது.

**'சொந்தவேலையில் சுகம்'** (1990) : சீனமொழியில் ஜாங்கி எழுதியது.

**'ஷிகானும் நத்தையும்'** (1991) சீனமொழியில் எழுதியது. இதில் ஷிகானும் நத்தையும் சீன நாடோடிக்கதை. ஒரு இளம் உழவன், கரையேறும் சாகக்கிடந்த நத்தை ஒன்றைக் காண்கிறான். அதனைத் தண்ணீர் தொட்டியில்போட அது உருப்பெற்று கட்டிளம் பெண்ணாக உருமாறுகிறது. இருவரும் காதல் கொள்கின்றனர். மணம் புரிகின்றனர். துரதிஷ்டவசமாக நடுவன் அறிகிறான் இவர்களைப் பற்றி. நத்தையை வைப்பாகப் பெறமுயல்கிறான். பெற்றோரும், குழந்தைகளும் தப்பி விடுகின்றனர். விஜயாங் ஆற்றில் குதித்து விசித்திரப் பாறைகளாக மாறி இன்றைக்கும் காட்சி தருகின்றனர். கற்பனை விருத்திக்காக இதுபோன்ற படைப்புக்களை நமது சிறார்கள் படித்துப் பார்க்கலாமல்லவா?

### கணேஷின் சுய ஆக்கங்கள்.

கணேஷ் அவர்கள் சிறுகதை, கவிதை, கட்டுரை, பத்தி எழுத்துக்கள், சிறுவர் ஆக்கங்கள், உரைச்சித்திரங்கள் எனப் பல சொந்தப் படைப்புக்களைத் தந்துள்ளார்.

**சிறுகதை:** கணேஷ் அவர்கள் மொத்தம் ஏழு சிறுகதைகளை எழுதியுள்ளார் என அறியப்படுகிறது. இவரது 'ஆசாபாசம்', மணிக்கொடியிலும்,'சட்டமும் சந்தர்ப்பமும்' என்ற கதை 'யுகம்' சஞ்சிகையிலும், 'பால்க்காரப்பழனி' 'ஆகஸ்ட் தியாகி ஆறு முகம்', சத்தியபோதிமரம் (டிசம்பர் - 1949) என்ற கதைகள் வீரகேசரியிலும் வெளிவந்தன. இவற்றுள் சத்தியபோதிமரம் மலையகச் சிறுகதைகள் தொகுப்பிலும், முன்னோடிச் சிறுகதைகள் தொகுப்பிலும் இடம்பெற் றுள்ளன. இக்கதைகள் யாவும் சமுதாயச்சீர் திருத்தங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் சமூகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் நோக்கில் எழுதப்பட்ட கதைகளாக அமைந்துள்ளன. 'டைரக்ரர் வெங்கு' (1949) , காலச்சக்கரம் (1949) ஆகிய இருகதைகள் சமீபத்தில் சாரல் நாடனின் தேடலில் கிடைத்துள்ளது.

(தொடரும்)

# கொலம்பியாவில் 34 விவசாயிகள் ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை!



கொக்கோ பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 34 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கொலம்பியாவின் வடகிழக்கு மாகாணத்திலுள்ள சன்ரான்டர் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

சுமார் 50 ஆயுததாரிகள் விவசாயிகளை சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தியதாக கொலம்பியாவின் உயர் இராணுவ அதிகாரியொருவர் பி.பி.சிக்குத் தெரிவித்தார்.

இடதுசாரி கிளர்ச்சிக்குழுவான 'பார்க்' என்ற அமைப்பே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாக கொலம்பிய அதிகாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இந்தப் பிரதேசம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வாழும் விவசாயிகள் மீது இதுபோன்ற தாக்குதல்கள் மேலும் அதிகரிக்கப்படலாமென்ற அச்சம் தெரிவிக்கப்படுவதாக மனித உரிமை கண்காணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை விவசாயிகள் அனைவரும் தூக்கத்தில் இருந்தவேளை அங்கு வந்த ஆயுததாரிகள் அவர்கள் அனைவரது கை மற்றும் கால்களை கட்டிவைத்துவிட்டு இயந்திரத் துப்பாக்கிகளால் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது மிகவும் துக்ககரமான நிகழ்வாகும். வன்செயல்களை கட்டுப்படுத்தி மக்களுக்கு பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென உள்ளூர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கிளர்ச்சிக்குழுவின் பிரதான மானவற்றில் ஒன்றான வலதுசாரி அமைப்புடன் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி உருபே பேச்சுக்களை ஆரம்பித்துள்ளார்.

விவசாயிகள் மீதான படுகொலையை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக இடதுசாரி கிளர்ச்சிக் குழுவான பார்க் அமைப்பு தெரிவித்துள்ளது.

# எண்ணை வயல் பாதுகாப்பு அதிகாரி ஈராக்கில் நேற்று சுட்டுக்கொலை!

(பக்தாத்)

ஈராக்கின் வடபகுதியிலுள்ள எண்ணை வயல்களின் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

காஸி அல்-தலபானி என்ற அதிகாரியே தனது கடமைக்காகச் சென்றுகொண்டிருந்தவேளை இர்குக் நகரப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட காஸி அல்-தலபானி, குர்திஷ்தான் தேசப்பற்று முன்னனியின் தலைவர் ஜலால் தலபானியின் உறவினராவார்.

கடந்த ஒரு வார காலத்தில் ஈராககில் கொல்லப்பட்ட மூன்றாவது முக்கிய நபர் இவராவார்.

இதேவேளை இந்தப் பாதுகாப்பு அதிகாரி கொல்லப்படுவதற்கு முன் ஈராக்கின் வடபகுதியிலுள்ள பிரதான எண்ணை விநியோகக் குழாய் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

நேற்றும் நேற்றுமுன்தினமும் இடம்பெற்ற இந்தக் குண்டு வெடிப்பினால் பிரதான எண்ணை விநியோகப் பாதை தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்த விநியோக குழாய்களைத் திருத்தி முடிப்பதற்கு குறைந்தது பத்து நாட்களாவது தேவைப்படுமென அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த எண்ணை விநியோகக் குழாய் மீதான தாக்குதலைத் தொடர்ந்து எரிபொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சவூதி சிறைகளிலுள்ள தமது உறுப்பினர்கள்

# விடுதலை செய்யப்படாவிட்டால் அமெரிக்க பிரஜை உயிரிழப்பார்!

## இஸ்லாமியக் குழு எச்சரிக்கை



சவுதி தலைநகர் றியாட்டில் அமெரிக்க பாதுகாப்பு தொழிற்துறையில் பணிபுரிந்துவந்த போல் ஜோன்சன் கடந்த சனியன்று இஸ்லாமிய போராளிகள் என சந்தேகிக்கப்படுவோரால் கடத்தப்பட்டிருந்தார்.

இவ்வாறு கடத்தப்பட்ட இவர், கண்கள் கட்டப்பட்ட நிலையில் இஸ்லாமிய இணயத்தளமொன்றில் வீடியோ ஒளிநாடா மூலம் நேற்று காட்டப்பட்டுள்ளார்.

இவரை இணையத்தள மூலம் காட்டிய இஸ்லாமியப் போராளிகள், தமது தரப்புப் போராளிகள் சிலரை விடுதலை செய்ய வேண்டும் எனவும் இல்லையெனில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அமரிக்க நாட்டவர் 72 மணித்தியாலத்துக்குள் கொலை செய்யப்படுவார் எனவும் எச்சரித்துள்ளனர்.

கண்கள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட அமெரிக்க பிரஜைக்கு அருகில் கறுப்புத் துணியால் முகத்தை மூடிய ஒருவர் ஏ.கே.47 துப்பாக்கி வைத்திருந்த நிலையில் காணப்பட்டார். இவரது பெயர் அப்துல்லா-அசிஷ்-அல் மொக்ரீன் என வீடியோ நாடாவில் காட்டப்பட்டது.

எனது பெயர் போல் மார்ஷல் ஜோன்சன் நான் அமெரிக்க நாட்டை சேர்ந்தவரென தடுத்து வைக்கப்பட்டுள்ளவர் வீடியோ நாடாவில் தெரிவித்தார்.

அமெரிக்கப் பிரஜையை விடுதலை செய்யவேண்டுமெனில் சவுதியில் - சிறைகளிலுள்ள முஜாகுதீன் போராளிகளை விடுதலை செய்ய வேண்டும்.

இதற்கு நாம் 72 மணித்தியாலம் அவகாசம் தருகின்றோம் இல்லையெனில் அமெரிக்க நாட்டவர் கொல்லப்படுவார்.

இவ்வாறு எமது ஆதரவாளர்கள் விடுதலை செய்யப்படாவிட்டால் அராபிய நாடுகளில் புனித யுத்தம் இவ்வருடம் மேலும் தீவிரமாகுமென போராளிகள் தெரிவித்தனர்.

சவுதியின் வெளிவிவகார ஆலோசகர் அடெல் அல்யூபியர் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் -

பயங்கரவாதிகளுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்தமாட்டோம். கைதிகளை பரிமாற்றுவது சவுதியின் கொள்கையிலேயே இல்லை.

நாம் பயங்கரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி கைதிகளை விடுதலை செய்ய, பின் அவர்கள் இன்னுமொருவரை பிடித்து வேறொரு நிபந்தனையை முன்வைப்பார்கள்.

இதனால் பயங்கரவாதம் வளர்ந்து கொண்டு போகுமே தவிர குறையாது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த வீடியோவில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானதென அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

# நஜாவ் நகரை சாராத போராளிகளை வீடுகளுக்குச் செல்ல வேண்டுகோள்!

## சதார் விடுத்தார்

(பாக்தாத்)

ஈராக்கின் நஜாவ் நகரைச் சேர்ந்த தனது போராளிகளை அந்த புனித நகரிலிருந்து வெளியேறி அவர்களது வீட்டுகளுக்கு செல்லுமாறு - ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்கெதிராகப் போராடும் சதார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்கா தலைமையிலான படைகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பின்னரே சதார் தனது போராளிகளுக்கு இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கியப்பட்ட ஈராக்கை மேலும் கட்டியெழுப்புவதற்கு ஈராக்கில் அமைக்கப்படவுள்ள இடைக்கால அரசு நல்லதொரு வாய்ப்பெனவும் சதார் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.




# 17 ஆயிரம் கொங்கோ அகதிகள் புறூண்டியில்!



கொஙகோ ஜனநாயக் குடியரசில் மோதல்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், சுமார் 17 ஆயிரம் அகதிகள் புறூண்டிக்கு இடம்பெயர்ந்து சென்றிருப்பதாக யு.என்.சி.ஆர். அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த மாதம் ஏற்பட்ட மோதல்களை அடுத்து, இடம்பெயர்ந்த மக்கள், கொங்கோவில் நிலைமை பதற்றமாக இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

# கொரிய எல்லையில் நடந்த பிரசார யுத்தம் ஓய்ந்தது!




வட மற்றும் தென்கொரியா இடையே, சுமார் 50 வருட காலமாக இடம்பெற்றுவந்த பிரசார ஒலிபரப்புக்கள் யாவும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

1953 ஆம் ஆண்டு இடம்பெற்ற கொரிய யுத்தத்தின் பின்னர் தென்கொரியாவும், வடகொரியாவும் எலலைப் புறத்தில் ஒலிபரப்புக்களை நடத்திவந்ததுடன், விளம்பரப் பலகைகள் மூலம் பிரசாரங்களையும் நடத்தி வந்தன.

இரு நாடுகளுக்குமிடையிலான எல்லையில் பதற்றத்தைக் குறைப்பதற்காக ஏற்கனவே எட்டப்பட்ட உடன்பாட்டுக்கமைய எல்லையில் ஒலிபெருக்கிகள் மூலமான பிரசாரங்களை நிறுத்தவும், பிரசார விளம்பரப் பலகைகளை அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இரண்டு கொரியாக்களுக்கும் இடையிலான பனிப்போரின் அடையாளமாக எல்லைப்புற பிரசாரங்கள் இருந்து வந்தன.

வடகொரியாவில் ஒலிபெருககிகள் இராணுவ இசையையும் மற்றும் ஆட்சியாளர்களின் புகழ்பாடும் நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்பி வந்தன.

தென்கொரியா - பொப் இசை, சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் குறித்த பிரசாரங்களையும் ஒலிபரப்பி வந்தன.

ஆனால் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் இந்த ஒலிபரப்புக்கள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. தாம் இந்த ஒலிபரப்பை முடிவுக்குக் கொண்டுவருவதாக இறுதியாக தென்கொரிய ஒலிபரப்பில் கூறப்பட்டுள்ளது.

## ஆப்கானிஸ்தானில்

# அமைதிப்படை வாகனத்தை இலக்குவைத்துத் தாக்குதல்!

## பொதுமக்கள் மூன்று பேர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானில் சர்வதேச அமைதிகாப்புப் படையினரின் வாகனத் தொடரணியை இலக்குவைத்து நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் குறைந்தது மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானின் வட நகரான குந்தூஸில் நேற்றுக்காலை இத்தாக்குதல் இடம்பெற்றது.

றிமோட் கொன்றோல் மூலம் இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

சீனத் தொழிலாளர்கள் 11 பேர் கொல்லப்பட்டு ஒரு வாரம் கழிந்த நிலையிலேயே இத்தாக்குதல் இடம்பெற்றது.

குந்தூஸ் பகுதியில் சுமார் 200 ஜேர்மன் அமைதிப்படையினர் நிலைகொண்டுள்ளனர். இவர்களை இலக்குவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் இரண்டு மாணவர்களும், ஒரு முதியவரும் கொல்லப்பட்டனர்.

இதேவேளை, இத்தாக்குதலில் அமைதிப்படையினரின் ஆப்கான் சாரதி ஒருவர் கொல்லப்பட்டதாக கூறப்பட்டபோதும் இந்தச் செய்தி ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆப்கானில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரித்துவருவது குறிப்பிடத்தக்கது.


உலகச் சூழல் தினம் - யூன் 05



எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

World Environment Day - June 05

கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

தேசிய கடல் எல்லைகளுக்கு அப்பாலான ஆழமான கடற்பகுதி பூமியின் மேற்பரப்பில் 50 வீதமான பகுதியை மூடியுள்ளது. இதுவே உலகின் மிகக் குறைந்த பாதுகாப்புக்கு உட்பட்ட பகுதியாகும்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## தென்கிழக்கு பல்கலைக்கழக பிரதம பாதுகாப்பு அதிகாரி உறக்கத்தில் குத்திக்கொலை

தென்கிழக்கு பல்கலைக்கழகத் தின் பாதுகாப்பு உத்தியோகத்தர் களின் பொறுப்பதிகாரி நேற்று பிற் பகல் கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டார்.

வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த அவரை ஒடுபிடித்து வீட்டினுள் இறங் கிய நபர் ஒருவர் கத்தியால் குத் திக்கொலைசெய்துவிட்டுத் தப்பிச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படு கிறது. இந்தச் சம்பவம் தொடர்பாக அக்கரைப்பற்றுப் பொலிஸார் விசா ரணைகளை நடத்திவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (07)

## அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளான ஊழியர்களுக்குப் பரிகாரம்

### கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல்

(கொழும்பு)

1982 ஆம் ஆண்டின் அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளான கல்வித் துறையைச் சேர்ந்தவர்களுக்கு உரிய நிவாரணம் பெற்றுக் கொடுப் பது தொடர்பாக இரண்டு வாரத்துக் குள் தீர்மானிக்கப்படும் என - கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல் தெரிவித்தார்.

இவ்வாறு அரசியல் பழிவாங் கல்களுக்கு உள்ளான கல்வித் துறையைச் சேர்ந்த அதிகாரிகளின் பிரதிநிதிகள் நேற்று தாரா டி மெல் லைச் சந்தித்தபோதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

சங்கப் பிரதிநிதிகள் மகஜர் ஒன்றையும் செயலாளரிடம் ஒப்படைத் தனர்.

2001 ஆம் ஆண்டு அமைச் சரவைத் தீர்மானத்தின்படி பாதிக் கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டது.

ஆனால், அது இதுவரை நடை முறைப்படுத்தப்படவில்லை. இது தொடர்பாகவே அவர்கள் அமைச் சின் செயலாளருக்கு தெரியப்படுத்தி யுள்ளார்கள்.

### தமிழ்ச்செல்வனுக்கு...

செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பு சுமார் ஒன்றரை மணிநேரம் நீடித்தது.

இந்தச் சந்திப்பின்போது - சமா தானம் தொடர்பாக விடுதலைப்புலி களும், தமிழ் மக்களும் தற்போது கொண்டுள்ள நிலைப்பாடு குறித்து நோர்வேத் தூதுவரிடம் தமிழ்ச்செல் வன் விளக்கினார்.

### ஜனாதிபதி சந்திரிகா...

யும் பொருட்டு, ஐக்கிய தேசிய முன் னணி தலைமையிலான அரசு நடாத் திய சென்ற வேலைத் திட்டங்களை தற்போதைய அரசு முற்று முழுதா கவே குழப்பியடித்துவிட்டது.

இந்த நிலையில் ஜனாதிபதியின் தலைமையின் கீழ் அமைச்சர வையை அமைத்துக் கொண்ட தற் போதைய சிறுபான்மை அரசு, பொது மக்களுக்குத் தேவையானவற்றை நிறைவேற்றுவதன் பொருட்டு நாடாளு மன்றில் எதுவித செயற்பாடுகளை யும் இதுவரை கொண்டு செல்ல வில்லை. தற்போதைய நாடாளுமன் றில் அமைச்சர்களையோ அல்லது அமைச்சக்கான குழுக்களையோ அமைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா விற்கு எவ்வித சிறப்புரிமையும் உரி மையும் இல்லை.

எனவே, ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணி தலைமையிலான தற் போதைய அரசுக்கு பெரும்பான் மைப்பலம் இல்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஐ.தே.கவிற்கு எதிராக மட்டுமே அரசாங்க ஊடகங்கள் பிரசாரம் செய்யவேண்டும்

அரசாங்க ஊடகங்கள் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட் சிக்கு எதிராக மட்டுமே பிரசாரங் களை செய்யுமாறும், ஏனைய கட்சி களுக்கு எதிரான பிரசாரங்களை தவிர்க்கும்படியும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர உத்தர விட்டுள்ளார்.

கடந்தவாரம் ஊடகத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற அமைச் சர் மங்கள சமரவீர முதலாவதாக இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அரசாங்க ஊடகங்களின் தலை வர்களுடன் இடம்பெற்ற கூட்டம் ஒன் றில் பேசிய அமைச்சர் மங்கள சமர வீர, அரசாங்க ஊடகங்கள், ஜாதிக ஹெல உறுமய, இலங்கை தொழி லாளர் காங்கிரஸ், சிறிலங்கா முஸ் லிம் காங்கிரஸ் போன்ற எதிர்க்கட்சி களுக்கு எதிரான பிரசாரங்களை மேற் கொள்ளக்கூடாது.

பிரதான எதிர்க்கட்சியான ஐதேக வுக்கு எதிராகவே பிரசாரங்கள் நடத் தப்பட வேண்டும். ஐ.தே.கவின் தவறு கள் குறித்து அரச ஊடகங்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டி தணிக்கை களை வெளியிட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் ரூபவாஹினி தலைவர் எம்.என்.கனகர், ஐ.ரி.என் தலைவர் நியூட்டன் குணரத்தின, லேக் ஹவுஸ் தலைவர் ஜனதாஸ பீரிஸ், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத் தலைவர் ஹட்சன் சமரசிறி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சுகாதார அபிவிருத்திக்கு உலக வங்கி நிதியுதவி!

இலங்கையின் சுகாதார அபிவி ருத்திக்கு உலகவங்கி 60 மில்லி யன் அமெரிக்க டொலர்களை வழங்கி யுள்ளது.

இலங்கையில் உள்ள வறிய மக் களின் சுகாதார விருத்திக்காக இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக 40 மில்லியன் அமெ ரிக்க டொலர் முதற்கட்டமாக வழங் கப்பட்டு, இந்த நிதியுதவி மாவட்ட, மாகாண அடிப்படையில் செலவிடப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

மகப்பேற்று, சிறுவர் சுகாதாரம் போன்றன தொடர்பாக விசேட கவ னம் செலுத்தப்படவுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

## பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிலைய செயலகம் கிளிநொச்சியில் திறப்பு!

பெண்கள் அபிவிருத்தி புனர் வாழ்வு நிலையத்தின் புதிய செயல கக் கட்டடத் திறப்புவிழா நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம் பெற்றது. பெண்கள் அபிவருத்தி புனர்வாழ்வு நிலைய இயக்குநர் வி.சுதர்சினி தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் -

மாவீரர்களான கப்டன் வளர்மதி, மேஜர் நாதன் ஆகியோரின் தாயார் லில்லி றெஜினா மற்றும் அன்னை இல்ல இயக்குநர் வணபிதா றெஜி னோல்ட் ஆகியோர் சுடரேற்றினர்.

அரசியற்துறை மகளிர் பொறுப் பாளர் தமிழினி தேசியக் கொடியை ஏற்றினார்.

சர்வதேச தொழிலாளர் அமைப் பைச் சேர்ந்த கௌடியா இந்தச் செய லகத்தை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சுதர்சினி, தமி ழினி, வணபிதா றெஜினோல்ட் ஆகி யோர் உரை நிகழ்த்தினர். இந்த திறப்பு விழாவில் யு.என்.எச்.சி.ஆர் யுனிசெப் உட்பட வெளிநாட்டு நிறு வனப் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

### 980 மில்லியன்...

கள் மற்றும் கப்பலில் ஆயுதங்க ளைப் பொருத்துவதற்கான செலவு களை இலங்கைக் கடற்படையே ஏற்றுக் கொள்ளவேண்டும்.

அமெரிக்கா கடனடிப்படையில் வழங்கிய இந்தக் கப்பலுக்கு இவ் வாறு பாரிய தொகையில் செலவேற் பட்டுள்ள நிலையில், இந்தச் செலவுக் கான 980 மில்லியன் தொகையினை எவ்வாறு திரட்டுவதென்பதே அரசிற் குள்ள தற்போதைய முக்கிய பிரச்சி னையாக உள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

### நோர்வே தூதரக ....

யாளர், கமநலசேவைத் திணைக் கள அதிகாரிகள், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளைச் சந் தித்து நொராட் நிறுவனத்தின் ஊடாக செயற்படுத்தப்படவுள்ள எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராய்ந் தனர்.

பின்னர் நொராட் நிறுவனத்தி னால் மேற்கொள்ளப்படும் செயற் பாடுகள் தொடர்பாக ஆராய்ந்தனர்.

இந்த நோர்வேத் தூதரக அதிகாரி கள் குழுவின் விஜயம் நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச் சின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டி ருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

### அரச ஊடகங்களில்...

மேலும் மனிதாபிமான உதவி களை செயற்படுத்த முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் தற்போதைய அரசியல் நிலைப்பாடு தொடர்பாக விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் கொண் டுள்ள கவலை குறித்தும் நோர்வேத் தூதுவரிடம் தமிழ்ச்செல்வன் எடுத்து ரைத்தார்.

சமாதான முயற்சிகள் எதிர் பார்த்த அளவு இடம்பெறாதது குறித் தும் தமிழ்ச்செல்வன் இச்சந்திப்பில் தெளிவுபடுத்தினார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தி யாளர்களுக்குக் கருத்து வெளி யிட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் -

தொப்பிகல காட்டுப் பகுதியில் இராணுவத்தினர் பயிற்சி நடவடிக் கையில் ஈடுபடுவதால் உண்டாகும் வெடிச்சத்தங்களைக்கொண்டு தமி ழீழ விடுதலைப் புலிகளுக்கும் கருணா குழுவினருக்குமிடையே மோதல இடம்பெற்றுவருவதாக அரச ஊடகங்கள் பொய்ப்பிரசாரத்தில் ஈடு பட்டுவருகின்றமை ஒரு யுத்தநிறுத்த மீறலாகும்.

மட்டக்களப்பின் தொப்பிகலக் காட்டுப்பகுதியில் இராணுவத்தினர் பயிற்சியில் ஈடுபட்டுவருகின்றனர். அப்பகுதியில் துப்பாக்கிச்சூட்டுச் சத் தங்களும், குண்டுவெடிக்கும் சத்தங் களும் கேட்டவண்ணமுள்ளன.

இதனை அரச ஊடகங்கள் தவ றான பிரசாரமாகப் பயன்படுத்தி சமாதான முயற்சிகளைக் குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றன.

அரசின் இந்த ஊடகப் பொய்ப் பிரசார நடவடிக்கை அரசின்மீதான நம்பகத்தன்மையைக் குறைக்கின்ற செயலாக அமைந்துள்ளது.

சமாதானத்திற்கு எதிராகவும், தமிழ்த் தேசியத்திற்கு எதிராகவும், பிரதேச வாதத்தைத் தூண்டும் வகை யிலும் கருத்துக்களை விதைத்து வருகின்ற பிரித்தானிய ஒலிபரப்புச் சேவையை அரசு உடனடியாக நிறுத்தவேண்டும் எனவும் நோர்வே தூதுவரிடம் வலியுறுத்தப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பு குறித்து ஹான்ஸ் பிறஸ்கர் பத்திரிகையாளர் களிடம் கருத்துத் தெரிவிக்கும் போது-

புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் அரசின் சில நடவடிக் கைகள் குறித்து அதிருப்தி தெரி வித்ததுடன் போர்நிறுத்த உடன் படிக்கை அமுல்செய்யப்படுவது முறையாக நடைமுறைப்படுத்தப்பட வில்லை எனவும் -

அரசின் ஊடகங்கள் சில கிழக்கின் நிலவரம் தொடர்பாக பொய்யான கருத்துக்களைப் பரப்பி வருவதாகவும் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் பல்வேறு பிரச் சினைகளும் தீர்க்கப்படாதுள்ளது. குறிப்பாக இராணுவ நடவடிக்கை யால் சிதைந்துபோயுள்ள பகுதி களின் அபிவிருத்திப் பணிகள் இன் னமும் மேற்கொள்ளப்படவில்லை சில அபிவிருத்திப் பணிகள் முழுமை பெறாத நிலையில் காணப்படுகின் றன. அவற்றை மேற்கொள்வது தொடர்பாக புதிய அரசு இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள் ளப்படவில்லை.

இவ்வாறான நிலையில் பேச்சுக் களை ஆரம்பிப்பது எவ்வாறு தீர்மா னிப்பது என்கின்ற நிலையில் நாம் உள்ளோம் என தமிழ்ச்செல்வன் எம்மிடம் தெரிவித்தார் என்றார்.

## அரச ஊடகங்களில் பொய்ப்பிரசாரம்...

மாவட்டங்களின் மக்கள் மத்தியில் பதற்றத்தையும், பீதியையும் ஏற்ப டுத்தக்கூடிய வகையில் திட்டமிட்ட ரீதியில் பல்வேறு செய்திகள் பரப் பப்பட்டு வருகின்றன.

இவ்வகையில் கடந்த சில நாட் களாக தொப்பிக்கல காட்டுப் பகுதி யில் தமிழீழ விடுதலைப் புலிகளுக் கும், கருணா குழுவினருக்கும் இடையே பெரும் மோதல்கள் நடந்துவருவதாகவும், 70க்கு மேற் பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாகவும் முற்றிலும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை பரப்பி வருகின்றன.

இந்தப் பகுதியில் இவ்வகை யான எந்தவொரு மோதலோ அல் லது ஆள் இழப்புக்களோ ஏற்பட வில்லையென்பதே உண்மையான தாகும். இந்த நிலையில் அரச ஊட கங்களினால் இவ்வாறு திட்டமிட்ட ரீதியில் பரப்பப்பட்டுவரும் செய்தி களையிட்டு நாங்கள் எமது வன்மை யான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறான செய்தியின் உண் மைத்தன்மை பற்றித்தெளிவாக அறிந்து - ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இத்தகைய போலிச் செய்தி களை உண்மையானவையென நம்பவைப்பதற்காக படைத்தரப்பி னால் முயற்சிகள் முடக்கிவிடப்படுவ தாக நாங்கள் கருதுகின்றோம்.

கடந்த சில நாட்களாக மட்டக் களப்பு பிரதேச எல்லைப்புறங்களி லுள்ள இராணுவ முகாம்களிலி ருந்து தொடர்ச்சியான எறிகணை வீச்சுக்கள் இடம்பெற்றுவருகின்றன. பயிற்சி என்ற ரீதியில் இராணுவத் தால் நடாத்தப்படும் இந்த எறி கணை வீச்சுக்கள் அங்கே ஒரு மோதல இடம்பெறுகிறது என்ற மாயத தோற்றத்தை பிரதிபலிக்கின்றது.

மேலும் அரச ஊடகச் செய்தி களில் மோதலின்போது உயிர் இழந்த வர்களின் 17க்கு மேற்பட்ட சடலங் கள் படையினரால் கைப்பற்றப்பட் டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறாயின் படையினருக்கும் புலி களுக்கும் இடையில் மோதல் நிகழ்ந துள்ளதா? என்ற வினாவும் இங்கே எழுகின்றது.

விடுதலைப் புலிகள் சமாதான ஒப் பந்தத்தை ஏற்றுக்கொண்டு அதில் நம்பிககை வைத்துள்ளதுடன் இதற்கு எவ்வித பாதகமும் ஏற்படாத வகை யில் புரிந்துணர்வுடன் நடந்து வரு கின்றனர்.

அண்மைக்காலமாக மட்டக் களப்பு- அம்பாறை மாவட்டங்களில் இடம் பெறும் சம்பவங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை வலிந்து யுத் தத்திற்கு இழுக்கின்ற சீண்டல் நட வடிக்கைகளாகவே கருதமுடிகிறது.

இவ்வகையான நடவடிக்கைகள் தொடரும் பட்சத்தில் சமாதான முன் னெடுப்புக்கள் பெரும் பாதிப்புக்குள் ளாகும் என்பதை கவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இச் செய்தியினைப் பரப்பும் ஊடகங்கள் மக்கள் மத்தியில் ஒரு மூன்றாம் தரப்பாகச் செயற்படுத்து வதாக நாம் கருதவேண்டியுள்ளது எனவும் எமது கவலையை தெரிவித் துக் கொள்ளுகின்றோம். எனக் குறிப்பிடப்பட்டுள்ளது

spoken English with Grammar
Lectures By: MR.M.A.HARI
புதிய பிரிவு ஆரம்பம்
19.06.2004 சனி
மாலை 5 மணி
Saturday
Sunday
5.00 Pm.- 6.00 Pm.
HARY'S INSTITUTE
இல. 564, கஸ்தூரியார் வீதி
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அருகில்)
யாழ்ப்பாணம்.

மெகா
புலமைப்பரிசில்
வெற்றி பெற்ற
மாணவர்களுக்கான
பதிவுகள் ஆரம்பம்
விரையுங்கள் !
ASIAN COMPUTERS
யாழ்ப்பாணம்-சுன்னாகம்-நெல்லியடி

## அரசின் மெத்தனப்போக்கை...

இயல்பு வாழ்கை ஏற்படுத்தப்படுதல் வேண்டும் தமிழ்மக்களின் மீள் குடி யமர்வு நடவடிக்கை துரிதப்படுத்தல் வேண்டும். மலையகத்திலும் கிழக்கி லும் நடைபெறும் தமிழருக்கெதிரான வன்முறைகள் உடன்நிறுத்தப்படல் வேணடும முதலான ஐந்து கோரிக்கை களை முன்வைத்தே இந்தக்கண் டனப் பேரணி நடத்தப்படவுள்ளது.

நல்லூர் கந்தசாமி ஆலய முன் றலிலிருந்து இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தக் கண்டனப் பேரணியானது கோவில் வீதியூடாக யாழ் செயலகம் நோக் கிச்சென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு மகஜர் ஒன்றை யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்ம நாதனிடம் ஒப்படைக்கவுள்ளது.

இவ்வூர்வலம் நகர்ந்து செல்கை யில் யு.என்.எச.சி.ஆர், இலங்கைப் போர்நிறுத்த கண்காணிப்புக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மற்றும் மனித உரிமை ஆணைக்குழு முதலானவற்றிடமும் பேரணி தொடர் பாக மகஜர்களைக் கையளிக்க வுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.